

பொன்விழா நோக்கிய பயணத்தில் "தொண்டன்..."

2018

ISSN: 2012 - 6352 Reg. No.: 187317

# தொண்டன்

ஆரம்பம் 1969 பெப்ரவரி

ஒக்டோபர் - 2018

சமய - சமூக - இலக்கிய வெளியீடு

"புல்லுமலை குடிநீர்த் தொழிற்சாலை தமிழ் மக்களுக்கு பதில் சொல்லியாகவேண்டும்...?"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# தொண்டன்

ஒக்டோபர் - 2018

மலர் - 50 இதழ் - 09

✤ ஆசிரியர்

அருட்தந்தை. R. பயஸ் பிரசன்னா

✤ இணை ஆசிரியர்

மெற்றில்டா இராஜேந்திரம்

✤ துணை ஆசிரியர்

பெஸ்லியோ வாஸ்

✤ கணினி வடிவமைப்பு

சுபாஜெனி சங்கர்

✤ வெளியீடு

சமூகத் தொடர்பு நிலையம்,
மட்டக்களப்பு மறைமாவட்டம்.

✤ முகவரி

சமூகத் தொடர்பு நிலையம்,
அ.பெ.எண். - 44,
மட்டக்களப்பு.

✤ பதிப்பகம்

வணசிங்கா அச்சகம்,
திருமலை வீதி,
மட்டக்களப்பு.


## உள்ளே...


அன்புடன் உங்களோடு ........ 01
செபம் செய்வோம் ........ 02
வாழ்விலே ஒளி பெறுவாய் ........ 04
சிறார் வளர்ப்பில் ........ 05
மாணவர் பக்கம் ........ 06
எண்ணிப்பார்க்கையில் ........ 07
இலக்கிய மஞ்சரி ........ 08
நகைக்கவைக்கும் நாகரிகம் ........ 09
சமகால விந்தையான ........ 10
அன்பின் அரசி அன்னை ........ 11
சின்ன விசயங்கள் சிறந்த ........ 12
பூமிக்குத் தங்கம் எப்படி ........ 13
மருத்துவம் ........ 14
கனடா வாழ் மட்டக்களப்பு ........ 15
கத்தோலிக்கத் திருஅவையின் ........ 16
இதுதான்டா அரசியல் ........ 18
கடுகுக் கதை ........ 19
கத்தோலிக்கத் திருமறை ........ 20
மூன்றாவது கண் ........ 21
குறுங்கதை ........ 24
மக்களுக்கு நெருக்கமாக ........ 25
வினாவிடைப் போட்டி ........ 26
திருவிவிலியம் கற்போம் ........ 27
அறிவை வளர்ப்போம் ........ 28



✵ ஆக்கங்களுக்குப் பொறுப்பு அளித்தவர்களே (ஆ-ர்) ✵



SOCIAL COMMUNICATIONS CENTRE
P.O. BOX - 44
BATTICALOA.
TEL : 065 2226486
E-MAIL : battiscc@gmail.com



விலை: : 50/=

ஆண்டுச் சந்தா : 550/=

(தபாற் செலவு உட்பட)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




## "முதல் குரல்"

அன்புக்குரியவர்களே!

அம்மா! நான் கேட்ட முதல் குரல் உன்னுடையது அம்மா
பத்து மாதங்கள் பத்து விதமான வேதனைகளால் எனக்கு
நிம்மதியும் அமைதியும் மகிழ்ச்சியும் கொடுத்தாயே
அம்மா நான் பிறந்தபோது உன் சேலைதான் ஈரமானது
நான் உறங்க உன் சேலைதான் எனக்கு ஊஞ்சலானது
மழையில் நனைந்த என் தலையை துவட்டியதும் உன் சேலைதான் அம்மா.
மாம்பழம் தின்று என் கை துடைத்ததும் உன் சேலைதான்
நான் மழையில் நனையாமல் இருக்க குடையானதும் உன் சேலைதான்
நான் நீச்சல் பழக என் இடுப்பில் கட்டியதும் உன் சேலைதான்
ஆசிரியரின் மிரட்டலுக்கு ஓடி ஒழிந்ததும் உன் சேலைதான்
அப்பா அடிக்க வரும்போது என்னை ஒழித்து வைத்ததும் உன் சேலைதான்
காசு எடுத்ததும் என்னை கட்டி வைத்து அடித்ததும் உன் சேலைதான்
தலைவலிக்கு ஒத்தணம் கொடுத்ததும் உன் சேலைதான் அம்மா.

அம்மா உன் சேலையை தொட்டுப் பார்க்கிறேன். மறுபிறவியிலும் நீயே எனக்கு வேண்டும் என்று இறைவனைக் கேட்கிறேன். பருவம் வரை பக்குவமாய் வளர்த்துவிட்டாயே! ஊரே கூடி வந்தாலும் உத்தமன் என் பிள்ளை என்று விட்டுக்கொடுக்காமல் பேசினாயே நீ சொன்ன வார்த்தைகளை விளையாட்டாய் தட்டிக்கழித்த நாட்களை நினைக்கின்றேன். நெற்றி வியர்வை சிந்த பரிமாறும் உன் கை படைத்த உணவுகளை தவறவிட்ட நாட்களை எண்ணிப் பார்க்கிறேன். ஆசையால் மழையில் நனைந்து வர முணுமுணுத்தபடி தலை துடைப்பாய் உந்தன் முந்தானையில். இப்போது நனைகிறேன் ஆசையால் அல்ல. ஏக்கத்தால் அம்மா. அத்தி பூக்கும் தருணமாய் என்றாவது ஒருநாள் என்னைத் திட்டும் நீ, அதற்கும் எதிர்த்துப் பேசினேனே அம்மா. இங்கே உயர் அதிகாரி திட்ட சுரனை இல்லாத கல் போல தலைகுனிகிறேன் அம்மா. என்னை மன்னித்து விடு அம்மா.

நான் செய்ய மறக்கும் செயல்களை எனக்காகப் பக்குவமாய் பட்டியலிடுவாய்.

- நேரத்துக்கு ஒழுங்கா சாப்பிடு கண்ணு
- மறக்காம எண்ண தேய்ச்சி குளிடா
- ரோட்ல பத்திரமா பாத்து போடா
- உடம்ப நல்லா பாத்துக்கணும்

என்னும் வார்த்தைகளை நினைக்கிறபோது கண்கள் கட்டுப்படுத்திக்கொண்டாலும் இதயம் மட்டும் கதறி அழுகிறதே அம்மா. எனக்காக நீ கொடுத்த வாழ்க்கைக்கு இறைவனிடமே நன்றி சொல்லி உன்னை ஒப்படைக்கிறேன். உன் காலடியில் அமர்ந்து இதையெல்லாம் நினைக்க மீண்டும் எனக்கு வரம் ஒன்று கொடுப்பாயா....?

பெற்றெடுத்த தாயை நினைப்போம். அவளை இறுதிவரை சுமப்போம்...

- ஆசிரியர் -






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# செபம் செய்வோம் தினமும் செபமாலை சொல்வோம்



பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகை
ஆயர்- மட்டக்களப்பு மறைமாவட்டம்.



அக்டோபர் மாதம் பிறந்தாலே செபமாலை சொல்ல வேண்டிய தன் அவசியம் எம்மை ஆட்கொள் கின்றது. திருஅவையின் பாரம் பரியம் அக்டோபர் மாதத்தை செபமாலை மாதமாக அனுசரித்து வருவதை மறுக்க முடியாது. பாத்திமாவில் நம் அன்னை "நான் திருச்செபமாலையின் அன்னை" என மொழிந்த பின் செபமாலையின் பக்தி முழுவதுமாக உலகிற்கு வெளிப்படுத்தப்பட்டது.

செபமாலையில் இரண்டு செபங் கள் அடிப்படைச் செபங்களாக உள்ளன. ஒன்று "கர்த்தர் கற்பித்த செபம்" (மத் 6:9-13): மற்றொன்று "மங்கள வார்த்தைச் செபம்" (லூக் 1:26-38). இந்த இரண்டு செபங்க ளும் கத்தோலிக்கத் திருச்சபை விசுவாசிகளின் முதல் பக்தி முயற் சிகளாய் இருந்து வருகின்றன. இயேசுவின் அப்போஸ்தலர் காலம்தொட்டு, இன்றுவரை உபயோகத்தில் இருந்துவரும் செபங்களும் இவைதான். எனவே, செபமாலையை விசுவாசிகளின் முதல் செபம் என்று ஐயமின்றிக் கூறலாம்.

செபமாலை மனித வார்த்தைகள் அல்ல; அவை தூய தமதிரித்துவத்தின் வாழ்த்துக்கள். கபிரியேல் தூதர் கன்னிமரியாவிடம், "அருள் மிகப்பெற்றவரே வாழ்க! ஆண்டவர் உம்மோடு இருக்கிறார்!" (லூக் 1:28) என்று வாழ்த்திய உடனே மரியா இறைவனின் தாய் ஆனார். இதுவே செபமாலையின் முதல் வார்த்தைகள். தந்தையாம் இறைவனே தம் தூதர் வாயிலாக மரியாவை வாழ்த்துகிறார். மரியா தம் உறவினரான எலிசபெத்தைச் சந்திக்க, செக்கரி யாவின் இல்லத்திற்குச் சென்றபோது எலிசபெத்தை வாழ்த்தினார். அப்போது மரியாவின் வாழ்த்தை எலிசபெத்து கேட்டவுடனே அவர் வயிற்றினுள்ளே குழந்தை அக்களிப்பால் துள்ளியது; எலிசபெத்து பரிசுத்த ஆவியாரால் நிரப்பப் பெற்றவராய் மிகுந்த சத்தத்துடன், "பெண்களுக்குள் நீர் ஆசீ பெற்றவர்; உம் வயிற்றில் வளரும் குழந்தையும் ஆசி பெற்றதே!" (லூக் 1:42) என உரைத்தார். தூய ஆவியானவரே இவ்வாறு மரியாவைப் புகழ்ந்தார்.

தூய தமதிரித்துவத்தின் இரண்டாம் ஆளாகிய இயேசு வின் மனுவுருவின் இரகசியத்தை இந்தச் செபமாலை கொண்டுள்ளது. நாம் இந்த இரகசியத்தை இருபது தேவ இரகசியங்களாக செபமாலை முழுவதும் தியானிக்கிறோம். மரியா இறைவனைப் புகழ்ந்து, "இதுமுதல் எல்லாத் தலைமுறையினரும் என்னைப் பேறுபெற்றவர் என்பர்" (லூக் 1:48) எனப் பாடினார். செபமாலையை இந்த வார்த்தைகள் நிறைவுபெறச் செய்கின்றன. "அருள் நிறைந்தவரே!" என ஆயிரமாயிரம் முறைகள் நாம் செபமாலையில் அன்னையைப் போற்றுகிறோம்! செபமாலையை நாம் செபிக்கும்போது நம் உள்ளத்தில் எழுகின்ற ஆன்ம அழகை உணரமுடிகின்றது.

1883 ஆம் ஆண்டு திருத்தந்தை 13ம் சிங்கராயர் தனது சுற்று மடலில் செபமாலை அன்னையின் பக்தியைப் புனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

சுவாமிநாதரின் காலத்திலிருந்து தொடங்கியது என வரையறுத்துள்ளார். நம் அன்னை பாத்திமாவில் காட்சியளித்த அந்த மூன்று சிறுவர்களுக்கும் பின்வரும் வார்த்தைகளை செபமாலையின் ஒவ்வொரு 10 மணிகளின் நிறைவில் சொல்லக் கற்பித்தார்.

"ஓ! என் இயேசுவே,
என் பாவங்களை மன்னியும்,
நரக நெருப்பிலிருந்து
எங்களைக் காப்பாற்றும்.
சகல ஆத்துமாக்களையும்
சிறப்பாக உமது இரக்கம் யாருக்கு
தேவைப்படுகிறதோ அவர்களையும்
மோட்சத்தில் சேர்த்தருளும்."

இவ்வார்த்தைகள் மரியாவே செபமாலையுடன் இணைத்த வார்த்தைகள். செபமாலை மாதமாகிய அக்டோபர் மாதத்தில் செபமாலை செபித்து அருள் வாழ்வில் நம்மை இணைத்துக் கொள்வோம். "ஆண்டவரின் மீட்புத் திட்டத்தில் முதன்மையானவராகிய அன்னை மரியா ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்". கபிரியேல் என்னும் வானதூதர் வழியாக இறைவனின் வார்த்தையை இதயத்தில் சுமக்கிறார் அன்னை மரியா. தூய்மை நிறைந்த இதயப் பேழையை இறைவார்த்தையால் நிரப்பினார் அன்னை மரியா. இத்தகைய இறை அனுபவம் நிறைந்தவர்தான் அன்னை மரியா.

"செபம் செய், தவம் செய்" என்றவர் அன்னை. செபமாலை சொல்வோர்க்கு ஜெயம் தருபவர் அன்னை. திக்கற்றோருக்கு தஞ்சமாக இருப்பவர் அன்னை. தயங்கிடும் உள்ளம் கொண்டோர்க்கு, தாயானவர் அன்னை. செபமாலை சொல்லிடுவோம். நாளும் அருள் மாலையைக் கன்னியாம் செபமாலை அன்னைக்கு நாம் சூட்டிடுவோம். கலக்கம் நம்மில் போக்கிட கரம் விரித்து நிற்பவர் அன்னை. மாசுகள் நம்மில் மறைந்திட நேசமாய் நம்மைக் காப்பவர் அன்னை. தடுமாறும் வாழ்க்கை கரை சேர அடைக்கலமாய் இருப்பவர் அன்னை. செபம் செய்வோம், ஜெயம் பெறுவோம், செபமாலை அன்னையை நாம் போற்றிடுவோம்.

அக்டோபர் மாதம் மட்டுமல்ல, ஒவ்வொரு நாளும் ஒரு கிறிஸ்தவன் செபித்து, தியானிக்க வேண்டிய மீட்பின் மறையுண்மைகளை உள்ளடக்கிய உயர்ந்த பக்தி முயற்சிதான் செபமாலை பக்தி முயற்சி. கடவுளின் மீட்புத் திட்டத்திற்கு துணை நின்று வாக்கு மனுவுருவான இயேசுவை தனது வயிற்றில் தாங்கி, மடி சுமந்து இவ்வுலகிற்கு வழங்கிய பாக்கியவதியான மரியாவுக்கு மக்கள் சூட்டும் வாடா மலர்களின் மாலை என்று செபமாலையை அழைக்கலாம். செபமாலை *(ROSARY)* என்றால் இலத்தீன் மொழியில் "ரோஜா மலர் கிரீடம்" என்று பொருள்.

அன்னையின் கரம் பற்றி இயேசுவின் வழிநடக்க உதவும் ஒப்பற்ற கருவி, கடவுளின் கொடை, அன்னை மரியாவின் அன்புக் கட்டளை செபமாலை என்பதை உணர்ந்து செபமாலை செபிப்போம். செபமாலை செபிப்பதை வழக்கமாக்கிக் கொண்டவர்கள் அன்னையின் பரிந்துரை அருளும், எதையும் செய்யும் இயேசுவின் விசுவாசம் மிக்க சீடர்களாகவும் வாழ்வர். ■

## திருத்தந்தையின் *மறையுரையிலிருந்து....*



**"நாம் சோதனைகளுக்கு உள்ளாகும் வேளையில், நம் வேதனையையும், தடுமாற்றத்தையும் பயன்படுத்தி, வெவ்வேறு குரல்கள் நமக்குள் ஒலிக்கின்றன. நம்மை அக்கறையற்ற, செயலற்ற நிலைக்கு உள்ளாக்கும் குரலை, தீய ஆவி என்று அடையாளம் கண்டுகொள்வது கிறிஸ்தவர்களின் கடமை"**

**"பிறருக்கு முன் நம்மையே விளம்பரப்படுத்துதல், அவசரமாக அடுத்தவரைப் பற்றிக் குறைகூறுதல், அனைத்தும் இறைவனின் கொடை என்றுணர்ந்து நன்றியறிந்திருப்பதற்குப் பதில், அனைத்தையும் அடக்கி ஆளுதல் போன்ற ஆசைகளை விட்டு விலகி நிற்கவேண்டும்"**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்விலே ஒளி பெறுவாய்!

- அருட்பாவலர் நிலா தமிழின்தாசன் -

சூரியன் உதிக்கு முன்னே
துயிலெழு என்மகனே! - நீ
துயிலெழு என்மகளே!

பள்ளிக்குப் போகவேணும் - நீ
பாடம் படிக்க வேணும்
பள்ளியெழு என்மகனே - நீ
துள்ளியெழு என்மகளே!

அன்னையொடு தந்தை குருநாதர்தனை
அடிபணிந்து நீ தொழுமகனே
உன்னையே நல்லதொருபிள்ளை என்றே
ஊருலகு மதிக்கணும்டா
மகனே மதிக்கணும்டா

தள்ளாடும் முதியவரைத் தாங்கியே கைகொடுப்பாய்
வழியில்காணும் விழியற்றோர்க்கு
வழித்துணையாய் நீ இருப்பாய்... மகனே!
வழித்துணையாய் நீ இருப்பாய்...
வாழ்விலே ஒளி பெறுவாய்






பசித்தோர்க்குப் பாதிச்சோறு பங்கிட்டு நீ புசிப்பாய்
பாடசாலை நண்பரோடும் நல்லுறவை நீ வளர்ப்பாய்
வசிக்கும் ஊர்மக்களின் வாஞ்சையுள்ள மகனாவாய்
வையகத்தார் போற்றிப் புகழ புனிதமுடன் வாழ்ந்திடுவாய்
மகனே! மகளே! புனிதமுடன் வாழ்ந்திடுவாய்

உண்மையைப் பேசிநாளும் உத்தமனாக வாழு
உள்ளத்தில் பொறாமை வஞ்சம் அற்றவனாக வாழு
எண்ணத்தில் தூய்மை என்றும் கல்வியால் ஏற்றம் சேரும்
எண்ணந்தான் வாழ்க்கை தம்பி ஏற்றுநட இதனைநம்பி.

## உலகின் முதல் பெண்மணிகள்....

1. உலகின் முதல் பெண் அதிபர் - இஸபெல் பெரோன் ஆர்ஜென்டினா (1974)
2. உலகின் முதல் பெண் பிரதமர் - சிறிமாவோ பண்டார நாயக்கா - இலங்கை (1960)
3. முதல் கறுப்பினப் பெண் நீதிபதி - ஜேன் மடில்டா போலின் - நியூயார்க் நகரம் (1939)
4. வரலாற்றில் பதிவான முதல் உலகப் புகழ்பெற்ற பெண்மணி - ஹாட்ஷேப்சுட் (கி.மு. 1479)
5. முதலாவது உலக அழகி - கிகி ஹாக்கோன்சன் - சுவீடன் (1951)
6. முதலாவது மிஸ் யூனிவர்ஸ் - அர்மி குசேலா - பின்லாந்து (1952)
7. செயற்கை இதயம் பொருத்திக்கொண்ட முதல் பெண்- மேரி லூண்ட் (1986)
8. ஒலிம்பிக் தங்கப்பதக்கம் வென்ற முதல் பெண் - சார்லோட்டே கூப்பர் - பிரிட்டன் - ஒற்றையர் டென்னிஸ்
9. ஆங்கிலக் கால்வாயை நீந்திக் கடந்த முதல் பெண் - கெர்ருட் எடர்லே - 14மணி 39 நிமிடங்கள் (1926)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# சிறார் வளர்ப்பில் அக்கறை

"சேட்டை பண்றது தப்பா தப்பில்லையா, பேச்சை மாத்தாம பதில் சொல்லு, புரிஞ்சுதா, என ஒரு தாய், தனது நான்கு வயது குழந்தையிடம் கேட்க, தப்புதான், அதுக்கு என்ன சொல்லணும்" என அழுதபடி அக்குழந்தை பதில் சொன்ன 56 வினாடிகள் காணொளி கடந்த வாரத்தில் வாட்சப், பேஸ் புக் கலக்கலாக வந்து அசத்தியது. "திட்டாம, அடிக்காம வாயில சொல்லணும்" என குழந்தை சொல்ல, தாயும், அதற்கு "நீ சேட்டை பண்ணாம இருக்கணும்" எனச் சொல்ல, "சேட்டை பண்ணினாலும், திட்டாம அடிக்காம, குணமா வாயில சொல்லணும்" எனக் குழந்தை கண்ணைக் கசக்கிக் கொண்டே கூறியது. "இப்ப ஏன் அழற ஸ்மித்திகா, அப்ப சேட்டை பண்ணினா அடிக்காம என்ன செய்யணும், நீ சொல்லு" எனத் தாய் கேட்க, "சேட்டை பண்ணினாலும், திட்டாம அடிக்காம, குணமா வாயில சொல்லணும்" எனக் குழந்தை மீண்டும் சொல்லியுள்ளது. திருப்பூரைச் சேர்ந்த நான்கு வயது சுட்டிக் குழந்தை ஸ்மித்திகா, எந்தவித தயக்கமுமின்றி மழலையில் கூறியது, இன்றைய குழந்தைகளின் எதிர்பார்ப்பைப் பிரதிபலிக்கின்றது. ஸ்மித்திகாவின் தந்தை பிரகாஷ் அவர்கள் ஆட்டோ ஓட்டுநர். தாய் பிரவீனா அவர்கள், பின்னலாடை நிறுவனத்தில் தையல் தொழிலாளர். மகள் ஸ்மித்திகா குறித்து தாய் பிரவீனா அவர்கள் கூறுகையில், "வீட்டில் ஸ்மித்திகா ஒவ்வொரு விஷயமும் பேசும்போதும் அவளைத் திட்டாமல் ஊக்கப்படுத்தினோம். கேள்விகளை எழுப்பிக்கொண்டே இருப்பாள். எங்களுக்கு விடை தெரியாமல் இருந்தாலும், அவள் கேள்வி கேட்பதை நாங்கள் நிறுத்தச் சொல்லாததால் வகுப்பில் தனித்து மிளிர்கிறாள். அதேபோல் வேலை முடிந்து வந்ததும் தொலைக்காட்சிப் பெட்டிமுன் அமராமல், அவளிடம் பேசுவோம். அவள் வகுப்பில் நடந்ததையே சிறுகதை போல் அன்றாடம் சொல்லுவாள். அந்தளவுக்கு இரசித்துச் சொல்வதை அவள் வாயில் கேட்கும்போதே அத்தனை இரசனையாக இருக்கும்" என்றார்.



சிறு வயதிலிருந்தே குழந்தைகளுக்கு தன்னம்பிக்கை ஊட்டப்பட வேண்டும். குழந்தைகளிடம் உள்ள நற்பண்புகள் வெளிப்படையாகப் பாராட்டப்பட வேண்டும்

**சிறாரின் நிலைமை:**

குழந்தைகளை மடியில் அல்லது தள்ளுவண்டியில் வைத்துக்கொண்டு, அதேநேரம் வாட்சப்பைப் பார்த்துக் கொண்டு வரும் பெற்றோர் பலரைப் பேருந்துகளில் காண முடிகின்றது. குழந்தைகள் ஏதாவது கேள்விகள் கேட்டால்கூட அதற்குப் பதில் சொல்லாமல், கைபேசியிலும், வாட்சப்பிலும், முகநூலிலும் பெற்றோர் ஆழ்ந்துவிடுகின்றனர். அந்நேரங்களில் குழந்தைகள் பெற்றோரை ஏக்கத்தோடு பார்ப்பதைக் காணும்போது பரிதாபமாக இருக்கின்றது. ஒரு அறுபது ஆண்டுகளுக்கு முன்பு, கிராமங்களில் சிறார், ஐந்து கிலோ மீட்டர் தூரம் நடந்துகூட பள்ளிக்குச் சென்று வந்தனர். அப்படி படித்த மாணவர்கள் பலர், படிப்பிலும் சிறந்து விளங்கினர். கிராமங்களில் சிறுமிகள் தனியாக இரண்டு கிலோ மீட்டர் தூரம்வரைகூட வயல்களுக்குச் சென்று வந்தனர். அக்காலத்தில் எந்தவித அச்சமும் இருந்ததில்லை. ஆனால் இக்காலத்தில் பெற்றோர், குழந்தைகளை வீட்டிற்கு வெளியே விடவே பயப்படுகின்றனர்.

13ம் பக்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# கிறிஸ்தவம்

# மாணவர் பக்கம்

காமாத உயர்தரம்

- நில்மினி கஜேந்திரன் -

## கிறிஸ்தவ சபைகளின் ஒற்றுமையும் உரையாடலும் :

ஒற்றுமை திருச்சபையின் ஓர் இயல்புக்கூறு. கடவுள் ஒருவரே, அவர் அனுப்பிய மகன் இயேசுக்கிறிஸ்துவும் ஒருவரே. அவர் நிறுவிய திருச்சபையும் ஒன்றே, அதன் நம்பிக்கையும் ஒன்றே. ஆனால், கிறிஸ்தவமானது இன்று பல கூறுகளாகப் பிளவுபட்டுக் காணப்படுகிறது. அதிலும் பல்வேறு சபைகள், கோட்பாடுகள், வழிபாட்டு முறைகள், ஆட்சி அமைப்பு, செயற்பாடுகள் வேறுபட்டி ருப்பதுமல்லாமல் பல நேரங்களில் அவை ஒன்றிற்கொன்று முரணாகவும், எதிராகவும் கூடச் செயற்படுகின்றன.

கிறிஸ்தவத்தின் இந்தப் பிளவு நிலை அதன் உண்மை இயல்பிற்கும் உயரிய நோக்கத்திற்கும், அனைத்திற்கும் மேலாக அதை நிறுவியவரின் விருப்பத்திற்குமே முரணான தாகும். உலக மக்களனைவரும் ஒரே இறை தந்தையின் பிள்ளைகள் எனும் உண்மைக்குத் திருச்சபை அடையாள மாகும். ஒரு குடும்பமாய் சகோதர உறவுடன் காணப்பட வேண்டிய நிலையானது மாறித் தன்னுள்ளே பிளவுபட்டுப் பல பிரிவுகளாய்க் காணப்படுகின்றது. இயேசு இவ்வுலகில் வாழ்ந்த நாட்களில் சீடர்கள் மத்தியிலே ஒற்றுமையினை வலியுறுத்தினார். அதனைக் கட்டிக் காத்தார். பின்னால் வரக்கூடிய பிளவுகள் பற்றி எச்சரித்தார். அதன் ஒற்றுமைக் காகவும் செபித்தார். ஆனால், அது இன்று பிளவுபட்டி ருக்கின்றது. இதுவே நற்செய்தி அறிவிப்புப் பணிக்குப் பெருந்தடையாய் அமைந்துள்ளது.

திருச்சபையின் ஆரம்பகாலத்திலிருந்தே, புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இருந்தே திருச்சபை பிளவுண்டி ருந்தது. உதாரணம், கொரிந்து திருச்சபை (1 கொரி 1:10 – 13). காலப்போக்கில் ஆரியஸ், நெஸ்தோரியஸ் போன்றோரின் திரிபுக் கொள்கைகள் காரணமாகப் பிளவுகள் ஏற்பட்டன. மேலும், 11ம் நூற்றாண்டில் கிரேக்க, உரோமை சபைகளெனப் பிளவுண்டது. 16ம் நூற்றாண்டிலே புரட்டஸ்தாந்து புரட்சியின் காரணமாகப் புரட்டஸ்தாந்து சபைகள் உரோமைச் சபை யிலிருந்து பிரிந்து சென்றன. இதுவே, திருச்சபைக்கேற்பட்ட பெரும் தலையிடியாகவும், நற்செய்தி அறிவிப்புப் பணிக்கெதி ரான பெரும் முட்டுக்கட்டையாகவும் அமைந்த சவாலாகும். இதனால் சீர்திருத்தச் சபையினர் மனம்மாறி மீண்டும் கத்தோலிக்கத் திருச்சபையில் சேரப் பல முயற்சிகள் எடுக்கப்பட்டன. ஆனால், 400 ஆண்டுகளாய்ச் சபைகளிலே நிலவிய பாதுகாப்பு உணர்வும், பிற சபைகள் பாலான பகை யுணர்வும் இதற்குத் தடையாகவே இருந்தன. இவ்வெதிர் வாதப் போக்கானது 20ம் நூற்றாண்டில் சிறிது சிறிதாய் மறையத் தொடங்கியது. இதற்கு மூலாதாரமாய் அமைந்தது 1910ல் அங்கிலிக்கன் சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட கிறிஸ்தவ ஒன்றிப்பு இயக்கமாகும். இதன் ஆழத்தையும், அத்திவாரத்தையும் கத்தோலிக்கத் திருச்சபையில் ஏற்படுத்தியவர் திருத்தந்தை 23ம் அருளப்பராவார். "கிறிஸ்தவ ஒன்றிப்பின் தந்தை" என இவர் அழைக்கப் படுகிறார். ஆரம்பத்திலிருந்தே இவ்வொன்றிப்பிற்குப் பெரும் அக்கறை காட்டியவராவார். இதனை மேலும் வலுப்படுத்த உரோமையில் "கிறிஸ்தவ ஒன்றிப்புச் செயலகத்தை" நிறுவினார். எதிர்ப்பாளர்களாய்க் காணப்பட்ட சபைக் கிறிஸ்தவர்களைச் சகோதரர்களாக ஏற்றுக்கொண்டார்.

இவரைத் தொடர்ந்து திருத்தந்தை 6ம் பவுல் பெரும் முயற்சிகள் செய்தார். சங்கத்தின் 2ம் அமர்வின் தொடக்க உரையிலே "எவ்வகையிலேனும் நாம் இப்பிரிவினைகளுக்குக் காரணமாயிருந்தால் தாழ்மையுடன் கடவுளிடம் மன்னிப்புக் கேட்பதுடன்எங்களால் புண்பட்டவர்களாகத் தங்களைக் கருதும் சகோதரரின் பொறுத்தலையும் வேண்டுகின்றோம்" என்றார். இப்பின்னணியிலேயே 2ம் வத்திக்கான் சங்கத்தின் "கிறிஸ்தவ ஒன்றிப்புப் பற்றிய விதித்தொகுப்பு" வெளிவந்தது. இதன் முக்கிய அம்சம் ஏனைய சபைகளுடனான எமது உறவைப் பலப்படுத்துதல் ஆகும். வத்திக்கான் சங்கத்தின் இவ்வேடானது இலங்கையின் பல பாகங்களிலும் பல திருப்பு முனைகளை ஏற்படுத்தியுள்ளது. இதனால், சபைகளுக் கிடையேயான பகை, போட்டி, கட்சி மனப்பான்மை இன்று பெருமளவில் மறைந்துள்ளன. இதனால், இன்று ஒரு சபைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

போதகர்கள் இன்னுமொரு சபையின் கூட்டங்களுக்கு, வழிபாடுகளுக்கு அழைக்கப்படுகிறார்கள். அனைத்துச் சபைகளும் இணைந்து திருப்பலியில் ஒரு புதிய மொழி பெயர்ப்பை வெளியிட்டிருக்கிறார்கள். ஆயர் மன்ற மட்டத்திலும், மறைமாவட்ட மட்டத்திலும் கிறிஸ்தவ ஒன்றிப்பு ஆணைக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு திருச்சபையானது ஏனைய சபைகளுடன் ஒற்றுமையுடனான ஓர் உறவை வைத்துள்ளது. பெரும் திருப்பங்களை உண்டாக்கியுள்ளது. இவை அனைத்துமே 2ம் வத்திக்கான் சங்கத்திற்குள்ள பெருமையாகும். ■




**மனைவி** : ஏங்க! நீங்களாவது உங்கள் நண்பரிடம் சொல்லக் கூடாதா?
**கணவர்** : என்ன சொல்லனும் ...?
**மனைவி** : அவருக்குப் பார்த்த பெண் நல்லாவே இல்ல!
**கணவர்** : நான் ஏன் சொல்லனும்? பாவிப்பயல் எனக்கு அவன் சொன்னானா..?



**டாக்டர்** : உங்க கணவருக்கு இப்ப ஒய்வு ரொம்ப முக்கியம். இந்தாங்க தூக்க மாத்திரை..
**மனைவி** : ஒரு நாளைக்கு எத்தனை தடவை கொடுக்கனும் டாக்டர்..?
**டாக்டர்** : இது அவருக்கில்லை... உங்களுக்கு..!!





**ஆசிரியர் 1** : எதுக்கு சார் அந்த பையன பெஞ்ச் மேல நிக்கவச்சு இருக்கீங்க....???
**ஆசிரியர் 2** : கட்டபொம்மன தூக்குல போட்ட இடம் எதுன்னு கேட்டா கழுத்துன்னு சொல்றான்.

## எண்ணிப்பார்க்கையில்...



### நீ நீயாக இரு...!

நண்பர்களைத் தேடும் போதும் சரி,
உறவுகளை நாடும் போதும் சரி,
அலைய வேண்டாம்; நீ நீயாக இரு!
உன் பாட்டில் உன் பணிகளைச் செய்,
அதற்காக கடுமையாக உழை.
உனக்குரிய உள்ளங்கள்,
உனக்குப் பொருத்தமான இதயங்கள்
உன்னை வந்து சேரும்; உன்னோடே தங்கும்
இது நிச்சயம்!
சரியாக எண்ணிப் பார்க்கையில்.. ..
நீ நாடும் உறவு உன்னை வந்து
சேராது போனால்
அதற்கு உன்னைப் பிடிக்கவில்லை
என்பது மட்டும்தான் அர்த்தமல்ல!
உற்றுப் பார்த்தால், அதிகமானவர்களுக்கு
தம்மைத் தாமே விரும்பவதென்பது
மிகவும் சிரமமானது என்பது தெரிய வரும்.
தன்னை நேசிக்கத் தெரியாதவன்
அடுத்தவனை எப்படி நேசிப்பான்?
விரும்புவான்? உறவை நாடுவான்?

**ஆனந்தா ஏ.ஜீ.இராஜேந்திரம்**

## வினா விடைப் போட்டி - இல 05

**சரியான விடைகள்**

1. லூக்கா 1:28
2. 19ம் நூற்றாண்டில்
3. டுவிட்டர் செய்தியில்
4. ஒனாயர்
5. ஹிரத்த பிரசாத்
6. கறிவேப்பிலை
7. உலகிலிருந்து வறுமையினை விரட்டவேண்டுமாயின் நிலச்சீர் திருத்தம் அவசியம் என
8. கி.மு. 4,500 - 3,500
9. 2004
10. தொழிலாளரின் 8 மணிநேர வேலைக்கான போராட்டங்களே

**சரியான விடைகள் எழுதி 500/= பரிசு பெறும் அதிர்ஷ்டசாலிகள்:**

**யே. ஜெராட் றொசாயிரோ,**
மாதா கோயில் வீதி, பெரிய கல்லாறு - 01
கல்லாறு.

**M. D. அஞ்சலின்,**
காளி கோயில் வீதி,
பெரிய கல்லாறு - 03.

**அ. ஜெசோனா டனிஷா,**
இல. 4, கதிர்காமர் வீதி,
அமிர்தகழி,
மட்டக்களப்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




| | |
|---|---|
| பிள்ளை குட்டி பெற்றெடுத்தல் | பெருமை |
| பெற்றவற்றைச் சீராக வளர்த்தெடுத்தல் | அருமை |
| உள்ளம் தூய்மை ஆனவையாய் | |
| உயர்கல்வி பண்போடு | |
| தெள்ளியராம் வாய்த்துவிடின் மா | பெருமை! |

இலக்கியத்துறையில் ஈடுபாடு கொண்டு 'ஏகலைவனாக' தன்னை வளர்த்துவரும் ஜே.எச். இரத்தினராஜா அவர்கள், சமூக அக்கறை ஆண்டு - 2018 வெளியீடாகத் தனது இரண்டாவது தொகுப்பு நூலாக 'சகாயத்தாய்'என்னும் புத்தகத்தை வெளியிட்டுள்ளார். 89 பக்கங்களைக் கொண்டதாகவும் அழகிய பதிப்பாகவும் இது வெளிவந்துள்ளது.

இதன் உள்ளடக்கங்களாக பின்வரும் இயல்கள் காணப்படுகின்றன.

இயல் - 01 : புனித சதா சகாய அன்னையின் திருப்பட வரலாறு.

இயல் - 02 : புனித சதா சகாய அன்னையின் திருத்தல வரலாறு - ஆயித்தியமலை

இயல் - 03 : புனித சதா சகாய அன்னையின் அருட்கரத்தால் இறை மக்கள் பெற்ற சகாயங்கள்.

இயல் - 04 : புனித சதா சகாய அன்னையை நோக்கிய நவதின வேண்டுதல்.

புனித சதா சகாய அன்னையின் புனித படமானது உரோம் நகரில் அமைந்துள்ள புனித. அல்போன்சா தேவாலயத்தின் பிரதான பீடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது என்பதைக் கூறும் இந்நூல், அத்திருப்படம் எவ்வாறு அங்கு வந்து சேர்ந்தது என்பதனைச் சிறப்பாக விளக்குகின்றது.

அத்துடன் அப்படத்தின் விளக்கமும் அழகாகத் தரப்பட்டுள்ளது. இது அனைவருக்கும் புதிய விடயமாகும். இப்படத்தின் மையப்பாத்திரங்கள் அன்னைமரியாளும், அவர் கைகளில் ஏந்தியுள்ள குழந்தை இயேசுவும் ஆகும். இயேசுவின் பாடுகளுக்கு அடையாளமாக கருஞ்சிவப்பு உடையையும், கன்னிமையின் அடையாளமாக நீல நிற மேலாடையையும், தலையின் முக்காடு அவரின் பணிவையும் குறிக்கின்றது.

இடதுபுறம் புனித. மிக்கேலும் வலது புறத்தில் புனித.கபிரியேலும் காணப்படுகின்றனர். இயேசுவின் விலாவைக் குத்திய ஈட்டியையும், புளித்த திராட்சை இரசமும், அதை ஈசோப்பில் தோய்த்து கொடுக்கப் பயன்பட்ட கோலும் மிக்கேல் சம்மனசானவரிடம் காணப்படுகின்ற அதேவேளை மூன்று குறுக்குத் தண்டுகள் கொண்ட சிலுவையும், ஆணிகளும் கபிரியேல் சம்மனசானவரிடம் காணப்படுகின்றன....

இவ்வாறு விளக்கங்கள் தொடர்கின்றன.

இந்நூலுக்கான ஆசியுரைகளை, மறைமாவட்ட ஆயர் அருட்கலாநிதி. ஜோசப் பொன்னையா ஆண்டகையவர்களும், குரு முதல்வர் அருட்பணி. A. தேவதாசன் அவர்களும் மற்றும் அருட்பணியாளர்கள் G. அலெக்ஸ் றொபர்ட், ப. ரமேஷ் கிறிஸ்ரி, அன்ரனி டிலிமா ஆகியோரும் வழங்கிவைக்க அணிந்துரையை நவாஜி அடிகளார் அளித்துள்ளார்.

இதுவொரு பயன்தரும் வரலாற்று நூல் என்பதில் ஐயமில்லை. அத்துடன் இதன் விலை வெறும் 150 ரூபா மட்டும் தான். காசு கொடுத்து வாங்கிப் படிக்க புத்தகமாகும்.

■






Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media


சிந்திக்க சில வரிகள்... 31



ஜெபிக்கும் கரந்தனில் வாடாமாலை கொண்டு
ஜென்ம பாவம் நீங்கிய தூய அன்னையை அண்டி
ஜெகத்தினில் அவர்க்குப் பாமாலை சூடியே
ஜெயம் பெறுவோம் வாழ்விலே நாமே.

– ராஜ் –

# நகைக்க வைக்கும் நாகரிகம்!



சீமையினை சீர்தூக்கி பார்க்கையிலே
சிரிப்பு சிரிப்பாய் வருகின்றது
சிறுவர்கள் பெரியாரின் வழியிலே
சின்னா பின்னமாக மாறுகின்றார்கள்.

சீக்கிரம் விடிவு வருமா என்று
சீர்திருத்த வாதிகள் சிந்திக்கின்றார்கள்
சீர்திருத்த வேண்டிய பிதா மாதா
சீர்குலைக்க சிறார்களை வழிநடத்துகின்றார்கள்

கருவறையில் தோன்றுகின்ற பிள்ளைகள்
கண்கண்டதையும் காதுகேட்டதையும் செய்கின்றார்கள்
கள்ளங்கபடமற்ற சிறு கனிகளை
கண்டிக்க யாருக்கு அதிகாரம்உண்டு

தொலைக்காட்சி சிறார்களை சீக்கிரம் கவர்கின்றது
வலைப்பின்னல் இளம் பருவத்தினரை
அறிவூட்டும் அதேவேளை வழிதவறவும் வழி
ஆய்ந்தறிந்து அசலெது நசலெது என்று ஆய்ந்தறியாது தடுமாறுகிறது

முகப்புத்தகம் முதிர்ந்துவரும் சிறார்களை முடக்கி
தன் வசமாக்கி விடுகின்றது
முதியவர்கள் பார்த்து கழிப்பதைக் கண்ட
முதிர்ந்து வரும் முத்துகள் முறை தவற வழிகாட்டுகின்றது

அந்நிய நாட்டு நடை உடை பாவனைகளால்
கவரும் அறிவிலிகள் அக்கறை இன்றி ஆடுகின்றார்கள்
அரை குறை உடை உடுப்பதுதான் அலங்காரம்
என அழிவுற நேர்கின்றது.

அக்கறை கொள் உன் பிள்ளை மேல் என
அறிவுறுத்தும் ஆசான்கள் கூட அக்கறையின்றி ஆடுகின்றார்கள்
ஏற்றிவிட வேண்டிய ஏணி இவர்
மாணாக்கரின் எதிர்காலம் பற்றிக் கருத்தின்றி இருக்கிறார்.

அழிந்துவரும் சமுதாயத்தை அக்கறையுடன்
ஆட்சிசெய்ய யார் வருவார்
ஆண்டவன் தான் அவர்களை காப்பாற்ற
வேண்டும் என அங்கலாய்க்கின்றது ஒரு சிறு கூட்டம்.

– பரிமளா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்றைய உலகம் நாம் எண்ணிப் பார்க்கவே முடியாத அளவு விந்தையான போக்கிலேயே சென்றுகொண்டிருக்கிறது. இன்றைய நவீன தொழில்நுட்பச் சாதனங்களின் வளர்ச்சியால் உலகமே சுருக்கி உள்ளங்கைக்குள் வந்துவிட்டது. இன்றைய காலகட்டத்தில் இத்தகைய தொழில்நுட்பச் சாதனங்கள் இல்லாத வீடுகளே இல்லை எனலாம். குறிப்பாக Smart Phone இல்லாத மனிதர்களைக் காண்பதே அரிதாக உள்ளது. இத்தொழில்நுட்பச் சாதனங்களின் மூலம் மனிதன் நன்மையானவற்றையும் பெற்றுக் கொள்கிறான். தீமையானவற்றையும் பெற்றுக் கொள்கிறான். ஆனால், எதை அதிகளவு பெறுகிறான்? நன்மையையா அல்லது தீமையையா?

ஆரம்ப காலங்களில் கடிதங்கள், பத்திரிகைகள் மூலமாக மட்டுமே நாட்டு நடப்புக்களை அறிந்துகொண்டோம். இன்று ஒரு கதிரையில் இருந்துகொண்டு உலகின் மூலை முடுக்குகளில் நடைபெறும் அனைத்து விடயங்களையும் அறிந்துகொள்கிறோம். முன்னைய காலங்களில் குடும்ப அங்கத்தவர்கள் வெளிநாடு சென்றால் அவர்கள் பல ஆண்டுகள் கழித்து வந்த பிறகுதான் அவர்களைப் பார்ப்போம். இப்போது video call மூலம் நேருக்கு நேர் பார்ப்பதுபோல் பார்த்து தூரத்திலுள்ள உறவினருடன் பேசிக்கொள்கிறோம். இன்று இணையதளங்கள் மூலம் எத்தனையோ நல்ல விடயங்கள் எம் வாழ்க்கைக்குக் கிடைக்கின்றன.

ஒரு நாணயத்திற்கு இரு பக்கங்கள் உள்ளது போல இத்தொழில்நுட்பச் சாதனங்கள் மூலம் நன்மையானவை பல கிடைப்பது போலவே பல தீமையானவையும் கிடைக்கின்றன. Facebook, Youtube, Twitter என எத்தனையோ வலைத்தளங்கள் உருவாகி விட்டன. இன்று மனிதர்கள் தங்கள் நேரத்தை அதிகமாகச் செலவிடுவது இவற்றில்தான். இவற்றின் மூலம் வெளிவரும் ஆபாசப் படங்கள், தவறான செய்திகள் என்பவற்றைப் பார்க்கப் பல மணி நேரத்தைச் செலவிடுகின்றனர். அவற்றைப் பார்ப்பது மட்டுமன்றி அவற்றைச் செய்தும் பார்க்கின்றனர். இதனாலேயே சமூகத்தில் கொலை, தற்கொலை, கொள்ளை, சிறுவர் துஷ்பிரயோகம் என்பன அதிகரித்துக்கொண்டே செல்கின்றன.

இன்றைய கிறிஸ்தவக் குடும்பங்களில் குடும்பச் செபமாலை இல்லை, திருப்பலிகள் இல்லை, கடவுள் பக்தி இல்லை, இறைவனை மறந்து வாழும் நிலை என அடுக்கிக்கொண்டே போகலாம்.

பெரியோரே! இளைஞர் யுவதிகளே! இந்தத் தொழில்நுட்பச் சாதனங்களுக்கு அதிக நேரத்தைச் செலவிடும் நீங்கள் கடவுளுக்காக எவ்வளவு நேரத்தைச் செலவிடுகிறீர்கள்? எனச் சற்றுச் சிந்தித்துப் பாருங்கள். உலகம் காட்டும் மாயவழியில் செல்வதை விடுத்து இறைவனைப் பற்றிக் கொண்டு வாழ முயற்சி எடுங்கள், சிந்தியுங்கள், செயல்படுங்கள். ■



# சமகால விந்தையான உலகம்!



- அருட்சகோதரி லூர்ட்ஸ் F.M.M -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# அன்பின் அரசி அன்னை திரேசா!



தொடர் - 2



- வாகரைவாணனன் -

**சுதந்திரத்திற்காக....**

தேசப்பற்று
அவர்
தேகமெல்லாம்
சுதந்திர தாகம்
சொல்லுக்குள்
அடங்காது!
அல்பேனியா
அப்போது
அடிமை போல!

துருக்கியின் அதிகாரம்
அதைத்
தொட்டு நின்றது.

அரும்பு அக்னசுக்கு
அப்போது
அகவை ஒன்பது
விருந்து ஒன்றுக்கு
நிக்கிலாவை
பெல்கிரேட்
விரும்பி அழைத்தது!

விருந்தில் இருந்து
அவர்
வீடு திரும்புகையில்
விஷம் அவரை
விழுங்கிக்
கொண்டிருந்தது.

விடுதலைக்கு அவர்
கொடுத்த விலை அது!

ஆதிக்கம் ஓர்
அசுரன்
நீதிக்கும் தர்மத்திற்கும்
நேர் எதிரி!

விடுதலை உணர்வை
அது
வேட்டை ஆடும்
வேறு வேறு
வடிவமெடுக்கும்
கூறு போடும்
கடைசியில்
குழி தோண்டிப்
புதைக்கும்.

நீக்கிலாவுக்கும்
இது தான்
நியதியானது.

கணவனை இழந்த
திரானா
கைம்பெண் ஆனாள்
கண்ணீர் மாலை
அவள்.
கழுத்தில் விழுந்தது
ஆனாலும் தையல்
அவளுக்குக்
கை கொடுத்தது.

வித வித ஆடைகள்
அவள்
கைகளில் இருந்து
விளைந்தன.
புதுவடிவம் கண்டு
மக்கள் பூரித்தனர்.

குடும்பச் சுமை
இதனால் குறைந்தது
குதூகலம்
கொஞ்சம் கொஞ்சமாக
எட்டிப் பார்த்தது.

**மொட்டு மலராக.....**

சின்ன வயதில்
புத்தகங்கள் தான்
அக்னஸின்
சினேகிதிகள்
சிந்தனை வானில்
சிறகடிக்கும்.

இந்தச்
சினேகிதிகளை
அவள்
என்றும் பிரிந்ததில்லை
விந்தை உறவு
பலருக்கு
விளங்கவேயில்லை.

எழுத்தும் அவளை
ஈர்த்தது
அதனால்
பேனாவை
அவள் கைகள்
பிரியாமல் ஏந்தும்.

பாட்டும் கட்டுரைகளும்
பத்திரிகைப் பல்லக்கில்
பவனி வந்தன.
பாராட்டுப் பத்திரம்
வாசிக்கப்பட்டது.

புனிதர் வரலாறு
புஸ்பங்களாக
மணம் பரப்பின
இனிமை அதில்
இதயம்
லயித்துப் போகும்.

வாசித்தாலும் எழுதினாலும்
அக்னசின் வாசம்
யேசு தான்.

எல்லாம் யேசுவே
அக்னஸ் சொல்வது
இந்தச் சொற்கள்தான்!


கன்னியாகும்
எண்ணம்
கருக் கொண்டது
இந்தக்
காலத்தில்தான்!

அருட்பணி ஆசை
அக்னசை
ஆட்கொண்டது.

- தொடரும்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




### கொடுப்பவர்களே பெறுகிறார்கள் :

"இருப்பதைக் கொடுத்தால் நினைப்பது நடக்கும்". இந்த வாசகத்தைப் பார்த்த இளைஞனின் பையில் இருந்ததென்னவோ முப்பது ரூபாய்தான். சாப்பாட்டுப் பொட்டலங்களை வாங்கிக்கொண்டு அமர்ந்தவன் கண்களில், உணவின்றித் தவித்த இரு குழந்தைகளும், ஒரு முதியவரும் தென்பட்டனர். அவர்களிடம் பொட்டலங்களைக் கொடுத்தான். முதியவர் மகிழ்ந்து, தன்னிடமிருந்த பழைய செப்பு நாணயங்களைக் கொடுத்தார். அதேநாளில் பழைய நாணயங்கள் சேகரிக்கும் கோடீஸ்வரர் ஒருவரைக் காண நேர்ந்தது. முதியவர் கொடுத்த அந்த நாணயங்கள் நல்ல விலைக்குப் போயின. கொடுப்பவர்களே பெறுகிறார்கள் என்பது புரிந்தது.

### ஒருமுறை மன்னிப்பது ...

வீட்டில் வளர்த்த கோழிக்குஞ்சை விளையாட்டாக அந்தச் சிறுவன் கொன்றான். அதைப் பார்த்துவிட்ட அக்கா, அம்மாவிடம் சொல்வதாய் மிரட்டியே அவனை எல்லா வேலைகளையும் வாங்கினாள். ஒருநாள், மனம் பொறுக்காமல், அம்மாவிடம் சொல்லி அழுதான் சிறுவன்.அம்மா அவனை மன்னித்தாள். கோழிக்குஞ்சுக் கொலை - நாம் செய்யும் தவறுகள், மிரட்டும் அக்கா - நம் குற்றவுணர்வு, மன்னிக்கும் அம்மா - கடவுள். கடவுள் நம்மை ஒருமுறை மன்னிப்பதே மறுமுறை தவறு செய்யாமல் இருப்பதற்குத்தான்.

- ஜே.ஜெ.இரத்தினராஜா -

## கண்களைக் கெடுக்கும் திரை ஒளி

தினமும் நாம் பயன்படுத்தும், கணினி, செல்பேசி, தொலைக்காட்சி ஆகியவற்றின் திரைகளிலிருந்து வெளிப்படும், நீல நிற ஒளி, நம் கண்களில் நேரடியாகப் பாதிப்பை ஏற்படுத்துவதாக "சயன்டிபிக் ரிப்போர்ட்ஸ்" இதழில் வந்துள்ள, ஒரு ஆய்வு உறுதிப்படுத்தி உள்ளது.

**வேதி மாற்றம்:**

இரவில், ஒளிரும் திரையுள்ள கருவிகளைப் பயன்படுத்துவதால், "சர்க்காடியன் ரிதம்" எனப்படும் நம் உடலின் பகல் - இரவு நேர கதியை உணரும் திறன் பாதிக்கப்படுவதை, ஏற்கனவே விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். இது தூக்கம், மூளையின் செயல் திறன், உடலியக்கம் போன்றவற்றைப் பாதிக்கிறது. என்றாலும் திரைக் கருவிகளிலிருந்து வெளியேறும் ஒளியில், நீல நிறம் கண்களில் உள்ள ஒளி உணர் திறனை நேரடியாகப் பாதிப்பதை, அந்த ஆய்வை மேற்கொண்ட அமெரிக்காவின் டொலீடோ பல்கலைக்கழக ஆய்வாளர்கள் அண்மையில் உறுதி செய்துள்ளனர்.

நீல நிற ஒளி, நம் விழித்திரையில் உள்ள ஒளிவாங்கிகளில் இருக்கும் "ரெடினல்" என்ற மூலக்கூறுகளை நிலைகுலையச் செய்கின்றன. ரெடினல் மூலக்கூறுகள் தான் விழித்திரையில் படும் ஒளியை மூளை உணர்வதற்கு உதவுபவை. நீல ஒளி படுவதால் ரெடினல் மூலக்கூறுகள் வேதி மாற்றமடைந்து, விழித்திரையில் உள்ள ஒளிவாங்கிகளைத் தாக்க ஆரம்பித்துவிடுவதாக ஆய்வாளர்கள் கண்டறிந்து உள்ளனர்.

**வடிகட்டிகள்:**

சில செல்பேசி நிறுவனங்கள், நீல ஒளியை திரையிலிருந்து வெளியேறாமல் தடுக்கும் வடிகட்டிகளை அறிமுகப்படுத்தியிருப்பதை ஆய்வாளர்கள் பாராட்டியுள்ளனர்.

ஆயினும் நாம் திரைக் கருவிகளைப் பார்க்கும் நேரத்தை முடிந்தவரை குறைப்பது கண்களுக்கு நல்லது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# பூமிக்கு தங்கம் வந்தது எப்படி?

## காரணத்தை கண்டு பிடித்தனர் விஞ்ஞானிகள்

தற்போது பூமியில் காணப்படும் தங்கம் மற்றும் பிளாட்டினம் போன்ற உலோகங்கள் அண்ட வெளியில் உள்ள இறந்த நியூட்ரான் நட்சத்திரங்கள் இரண்டு மோதிக்கொண்டதனால் உருவாகிய கனிமங்கள் என விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

அண்டவெளியில் நடைபெறும் நட்சத்திர மோதல்கள் ஈர்ப்பு அலைகள் (gravitational waves) எனப்படும் தொழில் நுட்பம் மூலமாகத் தொடர்ந்தும் அவதானிக்கப்பட்டு வந்துள்ளன. அதன்படி, சுமார் 130 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் நடைபெற்ற ஹைட்ரா உடுக் கூட்டத்தில் உள்ள என்.ஜி.சி 4993 என்ற நட்சத்திரத் தொகுதியில் உள்ள நியூட்ரான் நட்சத்திரங்களின் மோதலின் அதிர்வானது தற்போதே பூமியை வந்தடைந்துள்ளது.

இதனை ஆய்வு செய்த விஞ்ஞானிகள் இதனூடாகவும், நட்சத்திர மோதல்களைத் தொடர்ந்து அவதானித்ததன் மூலமாகவும் தங்கம் மற்றும் பிளாட்டினங்களின் தோற்றம் குறித்த தகவலை வெளிப்படுத்தியுள்ளனர். நட்சத்திர மோதலின் போது வெளிப்படுத்தப்படும், சிதறல்கள் மற்றும் ஆற்றலின் காரணமாகவே தங்கம், பிளாட்டினம் போன்றவை உருவாகின்றன எனவும், அண்டத்தில் நடந்த நட்சத்திர மோதல்களின் மூலமாகவே பூமியிலும் இவை கிடைக்கின்றன எனவும், விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

இரு நியூட்ரான் நட்சத்திரங்கள் இணையும்போது உருவாக்கப்படும் மாபெரும் வெடிப்பின் போது வெளிப்படுத்தப்படும் மீதங்கள் பில்லியன் கணக்கான டிகிரி வெப்பநிலைக்குத் தள்ளப்படும்போது உருவாகும் சாம்பலே தங்கம் மற்றும் பிளாட்டினம் என விஞ்ஞானிகள் மேலும் தெரிவித்துள்ளனர்.



**சிறார் வளர்ப்பில் ....** 5ம் பக் தொடர்.

பிள்ளைகளும் வீட்டைவிட்டு வெளியேறாமல், வீடியோ விளையாட்டுகளில் மூழ்கி விடுகின்றனர். முன்னொரு காலத்தில் பிள்ளைகள் உடல் களைக்க விளையாடிய தெத்திக்கோடு, நாயும் இறைச்சியும், கிட்டிப்புள் இன்னும் எத்தனையோ விளையாட்டுகள் உள்ளன. இன்று எத்தனை பிள்ளைகள் அவை பற்றி அறிந்துள்ளனர். அவர்கள் தங்கள் விளையாட்டு உலகத்தினைக் கைத் தொலைபேசியிலும், கணினியிலும் அடக்கிவிட்டனர். முழுவதுமாக அவர்களைக் குற்றம் சொல்லவும் முடியாது. இன்றைய போட்டிக் கல்வி முறைகளால் பிள்ளைகள் வீட்டில் ஓய்வாக இருக்கவும் நேரமின்றி ஓடி ஓடி கற்கின்றனர். களைத்தும் விடுகின்றனர். இதற்கிடையில் விளையாட நேரம் எங்குள்ளது? என்ற கேள்வி எழத்தான் செய்கின்றது.

முடியுமானளவு பெற்றோர் பிள்ளைகள் மட்டில் அதிகம் அக்கறை கொள்வது அவசியம். அவர்களின் நடவடிக்கைகளில் மேலதிக கவனம் செலுத்துவோம். கிடைக்கும் நேரங்களில் வெளியில் சென்று விளையாட அனுமதிப்போம். அவர்களின் வாழ்வில், சிறு வயதிலிருந்தே தன்னம்பிக்கையை ஊட்டுவோம். குழந்தைகளிடம் உள்ள நற்பண்புகளை, குணங்களை வெளிப்படையாகப் பாராட்டி ஊக்குவிப்போம். நல்ல குணங்கள் மென்மேலும் மேம்பட உதவுவோம்.

■ மூலம்: வத்திக்கான் செய்திகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பயனுள்ள சில மருத்துவக் குறிப்புகள்

○ தேள் கொட்டிய விரலை உப்புக் கரைசல் நீரில் சிறிது நேரம் வைத்திருந்தால் வலி குறையும்.

○ முடி உதிர்வதைத் தடுக்க நமது உடலை ஆரோக்கியமாக வைத்துக் கொள்வது அவசியம். இதற்கு அன்றாட உணவில் அதிகமான பச்சைக் காய்கறிகள், பழங்கள், கீரைகளைச் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

○ வேப்பம் பூவில் ரசம், பச்சடி செய்து சாப்பிட்டால் உடலுக்கு நல்லது. வெயில் சூட்டினால் வயிற்று வலி வரும். இதற்குக் கசகசாவை மிக்சியில் அரைத்துக் கொதிக்க வைத்து, பாலோடு சேர்த்து, துளி சர்க்கரை போட்டுச் சாப்பிட, வயிற்று வலி பறந்து விடும். ரோஜா இதழ்களுடன் பனைவெல்லம் சேர்த்துச் சாப்பிட்டால் சூடு குறையும். வாயில் நறுமணம் வீசும்.

○ இரவில் அரை டம்ளர் மோரில் சிறிது வெந்தயம் ஊற வைத்து, அதை அதிகாலையில் வெறும் வயிற்றில் குடித்தால் உடல் சூடு குறையும். கடைந்தெடுத்த மோரில் அரை மூடி எலுமிச்சம்பழச் சாறு பிழிந்து, சிறிது வெங்காயச் சாறு, பெருங்காயம் சேர்த்துக் குடிக்க உடல் சோர்வடையாது, அதிகமாக வியர்த்தாலும் களைப்புத் தெரியாது. மாவிலை வயிற்றுப் போக்கையும், மாம்பூ வெள்ளை வெட்டை நோயையும் நீக்கும். மாங்காய் ஸ்கர்வி நோயை விரட்டுகிறது. மாம்பழம், மாம்பழச்சாறு உடலுக்கு ஊட்டச்சத்தையும் வன்மையையும் தரக் கூடியது.

○ விட்டமின் 'ஏ'க்குத் தனியாக ஒரு மரியாதை உண்டு. விட்டமின் 'ஏ' உள்ள பப்பாளி, கரட், முருங்கைக் கீரை, அகத்தி போன்றவற்றில் ஏதாவது ஒன்றைத் தினமும் உணவில் சேர்த்து வந்தால், என்றும் மாறாத இளமைப் பொலிவு உண்டாகும். வெப்பத்தால் வரும் வயிற்று வலிக்கு ஒரு டம்ளர் மோரில் சிறிது உப்பு, சமையல் சோடா அரைக் கரண்டி கலந்து சாப்பிட வயிற்று வலி குணமாகும்.

○ உணவில் முள்ளங்கி அதிகம் சேர்த்துக் கொள்ள, சிறுநீர் நோய்கள், கல்லீரல் நோய்கள் வராது. வேர்க்கடலையை வெல்லத்துடன் சாப்பிட வேண்டும். உணவுப் பொருட்களால் ஏற்படும் தீங்கை இன்னொரு பொருளைச் சேர்த்துச் சாப்பிடுவதன் மூலம் தடுக்கலாம். மண் பாத்திரத்தில் காய்ச்சிய நீரை உணவுக்குப் பின் சாப்பிட்டால் புளியேப்பம், காய்ச்சல் நீங்கும்.

○ மாரடைப்பைத் தடுக்க, கொழுப்புச் சத்துமிக்க பொருட்களைச் சாப்பிடு வதைக் குறைக்க வேண்டும். பாம் எண்ணெய், தேங்காய் எண்ணெய், கடலை எண்ணெய் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். பழங்கள், காய்கறிகள், பருப்பு வகைகள், தானியங்கள் ஆகியவற்றை உணவில் அதிகம் சேர்க்க வேண்டும். மது, புகைப்பழக்கத்தைக் கைவிட வேண்டும். உணவில் உப்பின் அளவு ஒரு நாளைக்கு ஐந்து கிராம் என்ற அளவில் இருக்க வேண்டும்.

○ காதில் சேரும் அழுக்கைக் குறிப்பிட்ட நாட்களுக்கு ஒரு முறை அகற்ற வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. காதுகளில் உள்ள சிறு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

மயிர்க்கால்களால் அழுக்கு வெளியேற்றப்படும். காது அழுக்கை எடுப்பதற்காகக் காதைக் குடையக்கூடாது.

○ சாப்பிட்டதும் குண்டூசி அல்லது குச்சிகளைக் கொண்டு பற்களைக் குத்தக் கூடாது. அப்படிக் குத்தும்போது பல்லின் எனாமல் பாதிக்கப் படுவதோடு, ஈறுகளில் காயம் ஏற்படும். மேலும் பற்களைத் தொடர்ந்து குடைவதால் பற்களின் இடையே உள்ள இடைவெளி அதிகமாகி நாளடைவில் பல் பழுதுபட வாய்ப்பு ஏற்படும்.

○ மூக்கின் வழியாக வெளிப் பொருட்கள் நுழைந்தால் அவற்றை வெளியேற்றக்கூடிய அனிச்சை செயல் தான் தும்மல். மற்றபடி இராசியான தும்மல், இராசி இல்லாத தும்மல் என்று எதுவுமில்லை.

○ கடலை மாவு, செம்பருத்தி, வெள்ளரிக்காய், ஆரஞ்சுத்தோல் ஆகியவை முக அழகிற்கு ஆரோக்கியமானவை. செயற்கைப் பொருட்களை விட இயற்கையாகக் கிடைப்பவை சிறந்தது. தீராத இருமல் இருந்தால், மிளகைப் பொடி செய்து வெல்லத்துடன் கலந்து, சிறிது நேரம் தொண்டையில் வைத்திருந்து அந்தச் சாறை விழுங்கினால் சட்டென்று இருமல் நிற்கும். ■

## கனடா வாழ் மட்டக்களப்பு மறைமாவட்ட இறைமக்களுக்கு ஒரு வேண்டுகோள்

அன்பு நெஞ்சங்களே,

எமது மட்டக்களப்பு மறைமாவட்டம் ஏற்படுத்தப்பட்ட நாள் தொடக்கம் (2012) இன்று வரை கத்தோலிக்க ஆசிரியர்கள் இல்லாத அரசாங்கப் பாடசாலைகளில், தன்னார்வ கத்தோலிக்க ஆசிரியர்களை நியமித்து மாதாந்தம் ரூபா. 3,000.00 ஊக்குவிப்புப் பணமாகக் கொடுத்து வருகின்றோம். இத்தொகையை (ரூபா. 3,000x21 ஆசிரியர்கள்) எமக்கு அனுப்பிவைக்கத் தாராள மனத்துடன் முன்வந்தார்கள், கனடா டொரண்டோ வாழ் தமிழ் கத்தோலிக்க ஒன்றியத்தினர். கடந்த மூன்று ஆண்டுகளுக்கு மேலாக அவர்கள் இத்தொகையை அனுப்பிக்கொண்டிருக்கின்றனர். ஆயினும் தொடர்ந்து இந்த நன்கொடையை அனுப்ப முடியாத இக்கட்டான நிலையை அடைந்திருப்பதாகவும், இதனை ஈடுசெய்ய கனடா வாழ் மட்டக்களப்பு மறைமாவட்ட இறைமக்கள் முன்வந்தால் இப்பணியைத் தொடர்ந்து செய்ய முடியும் என்று ஆலோசனையும் கூறியிருக்கின்றனர். எனவே, கனடா வாழ் எம் மறைமாவட்ட மக்களிடம் நாம் வேண்டுவது யாதெனில் ஒவ்வொரு குடும்பமும் முன் வந்து தாராளமாக உதவி செய்தால் இக்குறையை நிவர்த்தி செய்து மறைக்கல்விப் பணியைத் தொடர்ந்து முன்னெடுக்க முடியும் என்பதையும் உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

+ P. Joseph

மேதகு. பேரருட்தந்தை ஜோசப் பொன்னையா,
மட்டக்களப்பு மறைமாவட்டம்

"கற்ற அறிவையும், பெற்ற செல்வத்தையும் இறுதிக்காலம் வரை மற்றவர்களுக்காகச் செலவிடுங்கள்"

"தன்னம்பிக்கை, தெளிவு, துணிச்சல் இந்த மூன்றும் தான் ஒருவனை எப்போதும் காப்பாற்றி வழிநடத்திச் செல்லும்" - கன்ஃப்யூஷியன்

"வாழ்க்கையில் மகிழ்ச்சியாக இருப்பதற்கு ஒரு வழி, அடுத்தவர்களின் வெற்றியை உங்களுடைய வெற்றியைப்போலக் கொண்டாடக் கற்றுக்கொள்ளுங்கள்"
- அப்துல் கலாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகள்

**--ஒரு குறும்பார்வை**

**அருட்பணி அ. அ. நவரெத்தினம் (நவாஜி)**
சிரேஷ்ட விரிவுரையாளர்.
கிழக்குப் பல்கலைக்கழகம். இலங்கை.

சென்ற மாத தொடர்ச்சி...

**நிறைவாக...**

கடந்த சிலமாதங்களாக கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகளை திருத்தந்தையர்களின் சுற்றுமடல்கள், இரண்டாம் வத்திக்கான் பேரவையின் கொள்கைத் திரட்டுக்கள், ஆயர்கள் பேரவைகளின் படிப்பினைகள், இன்னும் வேறு பல ஆவணங்கள் வாயிலாக அறிந்துகொண்டோம். இத்தகைய ஆவணங்களில் ஒட்டுமொத்தமாக மேலோங்கி நிற்கும் கருத்துக்களை உற்றுநோக்குகையில் கீழ்வரும் எண்ணக்கருக்கள் முன்னிலை பெறுகின்றன.

**1. மனித மாண்பு**

சடத்துவவாதத்தால் (materialism), சூழப்பட்டு மனித மாண்பு அற்றுப்போகும் இக்காலகட்டத்தில் கத்தோலிக்க திருஅவையானது மனித உயிர் புனிதமானதென்றும், மனித மாண்பே சமூகத்திற்கான ஒழுக்கவியல் பார்வையின் அடிப்படையென்றும் கற்பிக்கின்றது. கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினையின் ஆதாரமாக அமைவது மனிதனின் உயிரின் மீதான புனிதத் தன்மையும், அதனால் அவனுக்கு வருகின்ற மாண்புமேயாகும்.

**2. சமூகமும், பொதுநலனும்**

அளவுக்கதிகமான சுயநலப்போக்கினால் (individualism) ஆட்கொள்ளப்பட்டுள்ள உலகியல் அமைப்பில், நமது பாரம்பரியம் அல்லது மரபுரிமை கற்பிப்பது யாதெனில் மனிதர் புனிதமானவர்கள் மட்டுமல்ல அவர்கள் சமூகப் பண்பு படைத்தவர்கள் என்பதாகும். சமூகத்தினை அதிகம் பாதிக்கின்ற பொருளாதாரம், அரசியல், சட்டவாக்கம், கொள்கைகள் நேரடியாகவே மனித மாண்பிலும், சமூகத்தில் தனிமனிதர்கள் வளர்வதற்கான ஆற்றலிலும் தாக்கம் செலுத்துகின்றது. கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினையானது மனித உயிர்களையும், அவர்களது மாண்பினையும் பாதுகாப்பதும், சமூக நலனை ஆதரிப்பதும் அரசினதும், ஏனைய நிறுவனங்களினதும் தலையாய கடமையென கற்பிக்கின்றது.

**3. உரிமைகளும், கடமைகளும்**

கத்தோலிக்க திருஅவையின் பாரம்பரியம் கற்பிப்பது யாதெனில் மனித உரிமைகள் பாதுகாக்கப்பட்டு, அவர்களது கடமைகள் நிறைவேற்றப்படுகின்றபோது மட்டுமே, மனித மாண்பு பாதுகாக்கப்பட்டு, வளமுள்ள சமூகம் உருவாக்கப்படும் என்பதாகும். ஒவ்வொரு மனிதனுக்கும் உயிர் வாழ்வதற்கான அடிப்படை உரிமையுண்டு அத்துடன் மனித மாண்புடன் வாழ்வதற்கான பொருட்கள் மீதான உரிமையுமுண்டு. மறுபக்கத்தில் ஒருவர் ஒருவருக்கான, குடும்பத்திற்கான, சமூகத்திற்கான கடமைகளும், பொறுப்புக்களும் உண்டு.

**4. ஏழைகள், ஓடுக்கப்பட்டோர் மட்டிலான அக்கறை**

கத்தோலிக்க படிப்பினை முன்மொழிவது யாதெனில் எவ்வாறு ஆதரவற்றோர் வாழ்க்கையினை சமூகத்தில் முன்னெடுத்து செல்கின்றார்கள் என்பதாகும். ஏழை, பணக்காரர் என்கின்ற பாரிய பிரிவினையால் சூழப்பட்டுள்ள சமூகத்தில், திருவிவிலியப் பாரம்பரியம் மத்தேயு நற்செய்தியில் உள்ளவாறு இறுதித்தீர்வைக்கு (மத். 25:31-46) அழைப்பு விடுத்து, ஏழைகள் மற்றும் ஒடுக்கப்பட்டோரின் தேவைகளுக்கு வாழ்வில் முன்னுரிமை அளிக்க அழைப்பு விடுக்கின்றது.

**5. பங்கேற்றல்**

சமூகத்தின் பொருளாதார, அரசியல் மற்றும் கலாசார வாழ்வியலில் பங்கெடுக்க அனைத்து மாந்தருக்கும் உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

யுண்டு. அனைத்து மாந்தரும், சமூக வாழ்வில் குறைந்தளவேனும் பங்கேற்க வேண்டுமென நீதியின் அடிப்படை வேண்டுகோளாகவும், மனித மாண்பின் தேவையாகவும் உள்ளது. மறுபக்கத்தில் ஒரு நபரோ அல்லது ஒரு குழுவோ நீதியற்ற முறையில் நீக்கப்படுவதோ அல்லது சமூக வாழ்வில் பங்கேற்காமல் போவதோ தவறாகும்.

**6. தொழிலின் மாண்பும், தொழிலாளர்களின் உரிமையும்**

வர்த்தக நடவடிக்கைகளில் தொழிலாளரின் உரிமைகளைவிட, வியாபாரநோக்கு முன்னுரிமை பெறுகின்றது. பொருளாதாரமானது எப்போதும் மக்களுக்குப் பணிபுரிவதாக அமைய வேண்டுமேயன்றி, அவர்களை ஆட்கொள்வதாய் மாறிவிடக்கூடாது. தொழிலின் மாண்பு பாதுகாக்கப்பட வேண்டுமாயின், தொழிலாளர்களின் அடிப்படை உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும். உற்பத்தி செய்வதற்கான உரிமை, நியாயமான சம்பளம், தொழிற்சங்கங்களை உருவாக்குவதற்கும், இணைவதற்குமான உரிமை, தனியார் சொத்துரிமை மற்றும் பொருளாதார முயற்சிகளை மேற்கொள்வதற்கான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும்.

**7. படைப்பின் பணியாளர்கள் (பாதுகாவலர்கள்)**

படைப்பின் பணியாளர்களாக பணியாற்றுவதன் வாயிலாக, படைத்தவருக்கு மதிப்பளிக்க கத்தோலிக்க பாரம்பரியம் அழைக்கின்றது. நாம் இப் பிரபஞ்சத்தையும், அதில் வாழும் மக்களையும் பாதுகாக்க அழைக்கப்பட்டுள்ளதுடன், நமது நம்பிக்கையானது நாம் கடவுளின் அனைத்து படைப்புக்களுடனும் உறவில் வாழ அழைக்கின்றது. சுற்றுச்சூழலிலிருந்து பிறக்கின்ற சவாலானது ஒழுக்கவியல் மற்றும் மனித நடத்தையியல் சார்ந்து காணப்படுவதனால் அதனை வெறுமனே தட்டிக்கழிக்க முடியாது.

**8. இணக்கப்பாடு**

கத்தோலிக்க சமூகப் படிப்பினை கற்பிப்பது யாதெனில் மனிதர்கள் எங்கு வாழ்ந்தாலும் நாம் அவர்களின் காவலாளிகளாக இருக்கவேண்டும். நாம் எத்தகைய தேசிய, இன, குல, பொருளாதார மற்றும் சிந்தனைப் புலத்தினைக் கொண்டிருந்தாலும், நாம் எல்லோரும் ஒரே மனித குடும்பத்தை சார்ந்தவர்களே. இணக்கப்பாடென்பது எமது அயலவரை அன்பு செய்வதாகும். அடுத்தவரில் தங்கிவாழ்கின்ற உலகியல் அமைப்பில் இதற்கு சிறப்பிடமுண்டு.

**9. அரசின் செயற்பாடு**

மனித மாண்பினை ஆதரிப்பதிலும், மனித உரிமைகளைப் பாதுகாப்பதிலும், பொதுநலனை கட்டியெழுப்புவதிலும் கருவியாக செயற்படுவதில் நாட்டின் அரசிற்கு மிகப்பெரிய தார்மீகக் கடமையுண்டு. மக்கள் அடுத்தவர் மட்டில் தங்களது கடமைகளைப்புரிய அரசு தனது குடிமக்களுக்கு உதவ வேண்டும். இன்றைய பல்தரப்பட்ட சமூக அமைப்பில் ஒருவர் ஒருவருக்கென தங்களது கடமைகளைப் புரிவது இலகுவானது கிடையாது. இத்தகைய சூழ்நிலையில் குடிமக்கள் தங்களது கடமைகளைச் செய்ய அரசு உதவுவதுடன், பொது நலனையும் ஆதரிக்க வேண்டும்.

**10. அமைதியினை ஆதரித்தல்**


கத்தோலிக்க படிப்பினையானது அமைதியென்பது நேர்முக மற்றும் செயற்திறன் கொண்ட செயற்பாடாக பரிந்துரைக்கின்றது. "அமைதியென்பது வெறுமனே யுத்தமற்ற சூழ்நிலையல்ல, மாறாக மக்களுக்கும், நாடுகளுக்கிடையிலான பரஸ்பர மதிப்பும், நம்பிக்கை நிறைந்த நிலையுமாகும். அத்துடன் இணக்கப்பாட்டினையும், இணைக்கும் ஒப்பந்தங்களையும் தாங்கி நிற்கின்றது" என்கிறார் மறைந்த திருத்தந்தை புனித 2ம் யோன் பவுல். அமைதியும், நீதியும் ஒன்றொடொன்று இணைந்துள்ளது: அமைதி நீதியின் கனியாகும்.

கடந்த 125 வருட காலத்திற்கு மேற்பட்ட கத்தோலிக்க திருஅவையின் சமூகப் படிப்பினைகளின் அடிப்படையில் நோக்குகையில் மனிதன் மாண்புடன் படைக்கப்பட்டவன் என்பதனை ஏற்றுக்கொள்வோம். அவனுக்குரிய மாண்பினை வழங்குவோம். மனித உயிரினைப் பாதுகாக்கப் பாடுபடுவோம். மனித உரிமைகளைச் சரிவரப் பேணுவோம். சமூக, பொருளாதார, அரசியல், பண்பாட்டு வாழ்வியலில் செயல்முறையில் பங்கேற்போம். ஏழைகள், ஒடுக்கப்பட்டோரின் நலன்காக்க முனைவோம். மனித உறவினைப்

23ம் பக்....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இதுதாண்டா அரசியல்

## ஓ! ஜெருசலேமே!

கடந்த இதழ் தொடர்ச்சி ....

இலத்தீன் இராச்சியம் முடிவுக்கு வந்தபோது கிறிஸ்தவர்களுக்கும் எகிப்திய மம்லுக் சுல்தானுக்கும் இடையில் நிலவி வந்த நல்லுறவைப் பயன்படுத்திக் கொண்டு, தாம் தஞ்சம் புகுந்திருந்த சைப்பிரசிலிருந்து ஜெருசலேம் திரும்ப பிரன்சிஸ்கன்கள் திட்டமிட்டனர். 1333 இல் பிரெஞ்சு நாட்டு ரோஜர் குவேரின் என்ற பிரன்சிஸ்கன் குரு நேப்பிள்ஸ் அரசன் மற்றும் அரசியிடமிருந்து பெற்ற நிதியைக் கொண்டு சீயோன் மலையில் இயேசுவின் கடைசி இராப்போசனம் இடம்பெற்ற அளை இருந்த வீட்டை (Cenacle) யும், அதன் அயலில் இருந்த இடப்பரப்பையும் தங்களுக்கென்று ஒரு மடாலயம் கட்டுவதற்காக விலை கொடுத்து வாங்கினார். அவிஞ்சன் என்கின்ற இடத்தில் 21 நவம்பர் 1342 என்ற திகதியிடப்பட்ட கிரேஷியஸ் கரிஸ்ஸிமே மற்றும் நுப்பர் கரிஸ் ஸிமே என்கின்ற இரண்டு பாப்பிறை இலச்சினைகளைப் பதித்து ஆறாம் கிளெமன்ட் பாப்பாண்டவர் ஒரு தனி அமைப்பாக Custodia Terrae Sanctae என்ற புனித பூமியின் பரிபாலகப் பொறுப்பை உருவாக்கி அதை பிரான்சிஸ்கன்களுக்கு வழங்கி அங்கீகரித்து வைத்தார்.

பிரான்சிஸ்கன் சபையின் எந்தவொரு மாகாணத்திலுமிருந்தும் வருகின்ற குருக்கள் சீயோன் மடாலய மேலாளர் அவர்களின் அதிகார எல்லைக்குட்பட்டு இராப்போசன மற்றும் தூய கல்லறைக் கோயில், பெத்லகேமின் கிறிஸ்து பிறந்த இடத்து பேராலயம் மற்றும் ஜெருசலேம் எங்கும் இருந்தனர். இந்த கிறிஸ்தவ புனித இடங்களில் வழிபாட்டை உயிரூட்டமாக வைத்திருப்பதுவும், மேலை நாடுகளிலிலிருந்து வரும் யாத்திரீகர்களுக்கு ஆன்மீக வழிகாட்டுதல்களை வழங்குவதும், ஐரோப்பிய வணிகர்களுக்கு எகிப்து, சிரியா மற்றும் லெபனான் ஆகிய நாடுகளுக்குச் செல்லும் வழியில் தங்குமிடம் அல்லது கடந்து செல்ல வசதிகளை வழங்குவதும், கீழைத்தேய மரபு வழிக் கிறிஸ்தவ சமூகங்களுடன் நேரடி மற்றும் அதிகாரபூர்வ உறவுகளைப் பேணுவதும் அவர்களுடைய தலையாய பணியாக இருந்து வந்தது.

**நூரம்பேர்க்கிலிருக்கின்ற வடிவமைக்கப்பட்ட பலகையில் (1493) உள்ள ஜெருசலேமின் திட்டமும், பார்வையும்:**

சீயோன் மலையிலிருந்த மடாலயமானது சகோதரர் அல்பேர்ட்டோ டா சார்ட்டியானோ அவர்களால் கிரேக்க, கொப்ட் மற்றும் எத்தியோப்பிய மரபு கிறிஸ்தவர்களுடன் 1440 ஆண்டு புளொரன்ஸ் திருச்சங்க காலத்தில் உரோமையுடன் தொடர்பு கொண்டிருக்கச் செய்யும் பாப்பரசர் பிரதிநிதியாகத் தனது கடமைகளை மேற்கொள்ள பயன்படுத்தப்பட்டது. இதே நோக்கத்திற்காக சகோதரர் ஜியோவானி டி கலப்பரியா தலைமையில் எத்தியோப்பிய கிறிஸ்தவ நெகுவைச் சந்திக்க ஜெருசலேம் வழியாகச் சென்று கொண்டிருந்த ஒரு குழுவும் அங்கு தங்கிச் சென்றது.

1482 இல் அங்கு வருகை தந்த டொமினிக்கன் சபைக் குருவானவர் பீலிக்ஸ் பவ்ரி ஜெருசலேம் பற்றி விவரிக்கையில் "ஜெருசலேமானது உலகின் வேறுபட்ட நாடுகளது வாழிடமாக இருக்கின்றது. அது முன்னர் போலவே இப்போதும் அனைத்து அருவருப்பானவைகளதும் சேர்வையாகவும் இருக்கின்றது. 'அருவருப்பென' அவர் குறிப்பிட்டிருப்பது, சரசென்சுகள், கிரேக்கர்கள், சிரியர்கள், ஜெக்கோபிற்றுக்கள், அபிசினியர்கள், நெஸ்டோரியன்கள், ஆர்மேனியன்கள், கிரகோரியன்கள், மரோனைற்றுக்கள், டேர்கோமன்கள், பெடியூன்கள், ட்ரூஸ் மற்றும் அம்லுக் பிரிவுகளைச் சேர்ந்த கொலை பாதகர்கள் மற்றும் வஞ்சகர்களை ஆகும். அங்கு வாழ்ந்திருந்த கிறிஸ்தவர்களும், யூதர்களும் ஒரே மாதிரியில் மிகவும் வறுமைப்பட்டு வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அவர்கள் ஒடுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள், மறுக்கப்பட்டவர்களாக இருந்தார்கள். அங்கு அதிகம் கிறிஸ்தவர்கள் இருக்கவில்லை ஆனாலும் ஏராளமான யூதர்கள் அங்கு இருந்தார்கள். அவர்கள் முஸ்லிம்களால் பல வழிகளிலும் வதைக்கப்பட்டார்கள். இலத்தீன் கிறிஸ்தவர்கள் மட்டும் "கிறிஸ்தவ இளவரசர்கள் வரவேண்டும். வந்து முழு ஜெருசலேமையும் உரோமைக் கிறிஸ்தவ ஆட்சி அதிகாரத்தின் கீழ் கொண்டு வரவேண்டும் என்று உள்ளத்தால் ஏங்கிக் கொண்டிருந்தார்கள்.

1551 இல் குருக்கள் அனைவரும் துருக்கியர்களால் இராப்போசன வீட்டிலிருந்தும், அண்டையிலிருந்த மடாலயத்திலிருந்தும் வெளியேற்றப்பட்டார்கள். இருப்பினும் அவர்களுக்கு நகரத்தின் வடமேற்குப் பகுதியிலிருந்த ஜியோர்ஜியன் கன்னியர் மடாலயத்தைக் கொள்வனவு செய்ய அனுமதியளிக்கப்பட்டது. அதுவே ஜெருசலேமின் பரிபாலக அதிகார பீடமாக அமைந்ததோடல்லாது பிற்காலத்தில் புனித இரட்சகர் இலத்தீன் (டயர் அல் அதீன்) கன்னியரில்லமாகவும் விருத்தியடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

**ஒட்டோமானின் ஆரம்ப கால கட்டம்:**

1517 இல் ஜெருசலேமானது ஒட்டோமான் இராச்சியத்தால் பொறுப்பேற்கப்பட்டது. அதனைத் தொடர்ந்த மாவீரன் சுலைமான் காலத்தில் புதுப்பித்தலுக்கும், சமாதான வாழ்விற்கும் உள்ளானது. தற்போது ஜெருசலேமின் பழைய நகர் என்றழைக்கப்படும் பகுதியின் சுற்று மதில்கள் கட்டியெழுப்பப்பட்டன.(அதில் ஆரம்ப கால தொல்லியல் சிறப்புள்ள ஒரு சில பகுதிகள் இன்னும் இருக்கின்றன). சுலைமானதும் அவனைத் தொடர்ந்து வந்த ஒட்டோமான் அரசர்களின் ஆட்சியிலும் ‘அமைதியும் சமாதானமும்’ நிலவின. யூதர்களும், கிறிஸ்தவர்களும், முஸ்லிம்களும் மதச் சுதந்திரத்துடன் வாழ்தலுற்றனர். ஒரு செபக் கூடத்தையோ, ஒரு ஆலயத்தையோ. ஒரு பள்ளிவாயிலையோ சுலபமாகக் கண்டு கொள்ள முடியுமாக இருந்தது. சுலைமானுக்குப் பின்னர் இராச்சியத்தின் தவறான பரிபாலனத்தால் பொருளாதாரத் தேக்கம் ஏற்பட்டிருந்தாலும் அனைத்து சமயங்களுக்கும் அது பொதுவாகவே இருந்தது.

1700 இல் யூதா ஹிஹசித் தலைமையில் இஸ்ரேல் தேசம் நூற்றாண்டுகள் காலமாகக் காணாத பெரிய தொகுதி யூத மக்களைக் கொண்ட யூத குடியேற்றம் ஒழுங்குபடுத்தப்பட்டது. அவரது சீடர்கள் ஹூர்வா செபக் கூடத்தைக் கட்டியெழுப்பினார்கள். 16 ஆம் நூற்றாண்டிலிருந்து 1948 இல் அரபுப் படைகளால் அது அழிக்கப்படும் வரையிலும் வரையிலும் அதுவே பிரதான செபக் கூடமாகத் திகழ்ந்தது. பின்னர் அது 2010 இல்தான் மீளமைக்கபட்டது.




- பற்றி -

அன்ரன் நண்பர்களுடன் கூடிக்கதைத்துக்கொண்டிருந்தார். "பின்னேரமானா நம்மட ஊர் ரோட்டோரமெல்லாம் சாப்பாட்டுக் கடைதான். இடியப்பம், புட்டு எண்டு எக்கச்சக்கம்..... கடைகளுக்கு முன்னால பொண்டுகளும், ஆம்புளைகளுமாக சனந்தான்...." என்று அன்ரன் சொன்னார்.

"அப்படியெண்டா நம்மட அம்மாமார், மனிசிமார் எல்லாம் வீட்டுல ராச்சாப்பாடு செய்யிறதில்லியா...?" என்று தணிகாசலம் கேட்டார்.

அதுகளைச் சொல்லி பிரயோசனம் இல்ல வாப்பா.... ராவும், பவலும் புள்ளைகள இஸ்கூட்டர்ல ஏத்தியிறக்கிறதில அதுகள்ற நேரம் சரியாகக் கிடக்கு...." என்றார் இப்ராகிம்.

"சாப்பாட்டுக் கடைக்கும், கல்விகடைக்குமா பிள்ளைகள "ரான்ஸ்போர்ட்" பண்றதுதான் இப்ப மம்மிமார்ர வேல" என்றார் செலர் அங்கிள்.

"அட இன்னொரு புதினமொண்டு தெரியுமா....? இப்ப புதுக் கடைத் தொகுதியொன்று மட்டக்களப்பில திறந்து போட்டான்கள். சாப்பாடு வாங்க சனம் கும்பலாத்தான் திரளுது. அப்பாமார்ர "பேர்ஸ்ஸெல்லாம்" கவனம்டாப்பா .... எல்லாம் கோழிப் பொரியலாம்....." என்றார் தணிகாசலம்.

அன்ரனுக்கு பகீர் என்று இருந்தது. இரவுக்குப் பிள்ளைகளை அங்கு கூட்டிக்கொண்டு போறதென்று வாக்குக் கொடுத்தவர். பேர்ஸைத் தட்டிப்பார்த்துக்கொண்டு மெதுவாக எழுந்தார்.

**மருத்துவக் குணமுள்ள பூ**

புளியம்பூ - Tamarind Flower



புளியம்பூ - மலையைச் சார்ந்த காட்டில் முளைக்கும் இப்பூவினால் பித்த நோய், சுவையின்மை வாந்தி ஆகியவை தீரும்.

சிறுகீரை வேர், பொன்னாங்கணி வேர், புளியம்பூ, திப்பிலி ஆகியவற்றை எலுமிச்சம்பழச் சாற்றில் மைபோல் அரைத்து மாத்திரை போல் உருட்டி காய வைத்து எலுமிச்சம்பழச் சாற்றில் உரைத்து கண் கட்டியின் மீது போட்டால் கண் கட்டி குறையும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




"மறதி என்பது நிம்மதியான வாழ்க்கைக்கு இயற்கை கொடுத்த வரம். எப்போதாவது எளிய விஷயங்களை மறப்பதில் பிரச்சினை இல்லை. ஆனால், அன்றாடம் நாம் செய்யும் பணிகளை மறப்பது ஆபத்தே; அதைத்தான் "அல்சைமர்" என்கிறோம். காலையில் பல் துலக்கியது, குளித்தது, காலையில் சாப்பிட்ட உணவு, சந்தித்த நபர் என அன்றாடப் பழக்கங்களை மறந்துவிடுவார்கள் இந்த நோய்ப் பாதிப்புக்குள்ளானவர்கள். சில நேரங்களில் மிகவும் பழகிய இடத்துக்குச் செல்லும் வழி தெரியாமல் திணறுவார்கள், வழக்கமாகச் செய்யும் வேலையைச் செய்ய முடியாமல் கஷ்டப்படுவார்கள். பேசுவது, எழுதுவதில் சிரமம் உண்டாகும். குழப்பம், சந்தேகம், மனச்சோர்வு, கவலை, பயம் போன்றவை ஏற்படும். வழக்கமான குணாதிசயம் மாறி, ஆளுமைத் தன்மை ஒழிந்துவிடும். இதன் ஆரம்பக்கட்ட அறிகுறிகளை நோயால் பாதிக்கப்பட்டவரால் உணர முடியாது. உடன் இருப்பவர்களால்தான் அறிய முடியும். ஒரு கட்டத்தில் தன் துணை, மகன், மகள், உறவினர்கள், நண்பர்களைக்கூட மறந்துவிடுவார்கள். இதுபோன்ற சூழலில், முதலில் நரம்பியல் மருத்துவரையும் அடுத்ததாக மனநல மருத்துவரையும் சந்திக்க வேண்டும். அதேநேரத்தில் மறதிக்கும் அல்சைமர் நோய்க்கும் வித்தியாசம் உண்டு. உதாரணமாக, வீட்டைப் பூட்டி விட்டு வெளியே சென்றதும் வீட்டைப் பூட்டினோமா, விளக்குகளை அணைத்துவிட்டோமா எனச் சந்தேகம் வரும். மூக்குக் கண்ணாடியைப் போட்டுக்கொண்டே தேடுவது, வீட்டில் சொல்லும் வேலைகளை அவ்வப்போது மறப்பது போன்றவை அல்சைமர் நோயின் அறிகுறிகள் அல்ல. இவை கவனக் குறைபாட்டால் ஏற்படக்கூடியவை. இவை எப்போதாவது வரும். இந்த மறதியை அல்சைமர் எனப் பயப்பட வேண்டாம். அல்சைமர் என்பது பெரும்பாலும் வயதானவர்களில் சிலருக்கு மட்டுமே வரக்கூடியது."



- அசோகன்,
மனநல மருத்துவர்



## இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

தரம் : 11 பகுதி - II  கத்தோலிக்கத் திருமறை  நேரம்: 3 மணித்தியாலங்கள்

போதகர் S. அருமைராஜா (Dip.in.Chr (India)

12. அ. குருக்களின் கடமைகளைத் தருக :
   ஆ) திருத்தொண்டர்களின் கடமைகள் எவை?
   இ) திருநிலையினர் மட்டில் பொது நிலையினரின் கடமைகள் யாவை?
   ஈ) குருத்துவம் எனும் அருளடையாளத்தைப் பெறத் தகுதியானவர்கள் யார்?

13. அ) திருமணம் என்பது என்ன?
   ஆ) கத்தோலிக்க திருமணத்தின் பண்புகளான "ஒருமை, கட்டவிழாமை" ஆகியவற்றை விளக்குக?
   இ) கத்தோலிக்க திருமணத்தின் நோக்கங்கள் இரண்டையும் தந்து விளக்குக?

14. அ) கத்தோலிக்க திருமணத்திற்குள்ள சட்டரீதியான தடைகள் எவை?
   ஆ) அருளடையாளமாக ஏற்றுக்கொள்ளாத திருமணங்கள் எவை?
   இ) திருச்சபையின் நீதிமன்றம் ஒன்றின் பரிசீலனையின் முடிவில் எப்படிப்பட்ட திருமணங்கள் செல்லுபடியாகா திருமணமாகக் கொள்ளப்படும்?
   ஈ) கத்தோலிக்க திருமணத்தை வெற்றிகரமானதாக்கிக்கொள்ளத் தேவைப்படுபவை யாவை?

விடைகள் 22ம் பக்கத்தில் ....



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

# மட்டக்களப்பு மறைமாவட்டத்தில் புனித யோசவ்வாஸின் திருச்சிலுவைப் பயணம்!

**13**ஆம் நூற்றாண்டில் கல்கமுவ எனும் காட்டுப் பகுதியில் சில தமிழ் மக்கள் குடியேற்றப்பட்டு, அவர்களுக்கு சில பதவிகளும் சிங்கள அரசனால் கொடுக்கப்பட்டன. அதற்குப் பிற்பட்ட காலங்களில் அம்மக்கள் பல காரணங்களுக்காகத் தனித்து விடப்பட்டார்கள். இம்மக்கள் அனைவரும் நகரப்புறம் வருவதற்கு பெரிய அடர்ந்த காட்டினூடாகப் பயணம் செய்யவேண்டிய தேவை ஏற்பட்டது. இவ்வாறு இம்மக்கள் வாழ்ந்து வரும் காலத்தில், 17ஆம் நூற்றாண்டில் புனித யோசவ்வாஸ் புத்தளத்தில் இருந்து கண்டிக்குப் போகும் பாதையில் இம்மக்களைச் சந்தித்துள்ளார். இவர்கள் புனித யோசவ்வாஸ் அடிகளாரின் போதனையினால் கத்தோலிக்க மறைக்குள் இணைக்கப்பட்டார்கள்.

இம்மக்கள் காட்டுப் பகுதியால் தேவையான இடங்களுக்குச் செல்லும்போது காட்டு விலங்குகளின் தாக்கத்திற்கு உள்ளானார்கள். குறிப்பாக, யானையினால் தாங்கப்பட்டார்கள். இதை அறிந்த புனிதர், மக்களைப் பாதுகாக்கும் பொருட்டு கல்கமுவ காட்டுப் பகுதியில் சிலுவை ஒன்றை நாட்டினார். அச்சிலுவையை நாட்டிய பின்னர் மக்கள் பயமில்லாமல் அக்காட்டு வழியால் சென்று வந்தனர். அச்சிலுவையானது மக்களைக் காட்டு விலங்குகளின் ஆபத்திலிருந்து காத்ததோடு மட்டுமல்லாமல், நோயினால் பீடிக்கப்பட்டவர்கள் நம்பிக்கையோடு அச்சிலுவைக்கு அருகில் இருக்கும் மண்ணை எடுத்து, கரைத்து நோயுள்ள இடத்தில் பூசியும், கரைக்கப்பட்ட நீரை அருந்தியும் குணம் பெற்றுள்ளனர். இவ்வாறு பல அற்புதங்கள் நாளுக்கு நாள் நடைபெற்று வந்தன. அதனால் அம்மக்கள் புனித யோசவ்வாஸ் நாட்டிய சிலுவையை மனதில் இருத்தி, புனித யோசவ்வாஸின் பரிந்துரையைக் கேட்டு நலம்பெற்று வருகின்றனர். பிற மதத்தவர்களும் இந்த அற்புதங்களைக் கேள்விப்பட்டு அச்சிலுவை அடியில் வந்து மன்றாடி பல புதுமைகளை அடைந்துள்ளனர்.

அந்த சிலுவை தற்போது நாட்டின் அனைத்து இடங்களுக்கும் கொண்டுவரப்படுகிறது. எனவே நாம் நம்பிக்கையோடு சிலுவையை உற்றுநோக்கி இறைவனின் மாட்சியைக் கண்டடைவோம். ஆமென்!




**13.10.2018** - பொலன்னறுவையிலிருந்து சிலுவையைப் பொறுப்பேற்றல்.
- மாலை: புனித இஞ்ஞாசியார் ஆலயம் - *அம்பாறை*
- இரவு: புனித திருச்சிலுவை திருத்தலம் - *சொறிக்கல்முனை*

**14.10.2018** - காலை: புனித இருதயநாதர் ஆலயம் - *கல்முனை*
- மாலை: புனித யூதா ததேயு திருத்தலம் - *தேற்றாத்தீவு*
- இரவு: புனித மரியாள் பேராலயம் - *புளியந்தீவு*

**15.10.2018** - காலை: தூய காணிக்கை அன்னை ஆலயம் - *தாண்டவன்வெளி*
- மதியம்: புனித சூசையப்பர் ஆலயம் - *தன்னாமுனை*
- மாலை: புனித திரேசாள் ஆலயம் - *வாழைச்சேனை*

**16.10.2018** - காலை: புனித பேதுரு ஆலயம் - *வாகரை*





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாம் தவணை எதிர்நோக்கு முன்னோடிப் பரீட்சை

### விடைகள்

12. அ) - மறை உரை வழங்குதல்
- இறைமக்களின் ஆன்மீகத் தேவைகளை நிறைவு செய்தல்
- மக்களுக்கு உண்மையான ஆயன் ஆகுதல்
- இறைவழிபாடுகளை நடாத்துதல்
- தமது மறை மாவட்ட ஆயரோடு இணைந்து பணியாற்றல்

ஆ) - திருப்பலியிலும் திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் இறைவார்த்தையைப் போதித்தல்.
- திருப்பலியிலும் திருவழிபாட்டு நிகழ்வுகளிலும் ஆயருக்கும், குருக்களுக்கும் உதவுதல்
- திருமுழுக்கு வழங்குதல்
- மரணச் சடங்குகள் நடத்துதல்
- திவ்விய நற்கருணை ஆசீர் வழங்குதல்
- திருமணச் சடங்குகளை நிறைவேற்ற உதவுதல்

இ) - அவர்களுக்காக செபித்தலும், அவர்களை மதித்தலும்
- பங்குச் சபையின் பணிகளில் உதவுதல்
- இறையரசைப் பரப்பும் பணிகளில் உதவுதல்
- மறைக்கல்விப் பணிகளில் உதவுதல்
- திருவழிபாட்டு செயல்களில் உதவுதல்
- பொதுப் பணிகளில் உதவுதல்
- அவர்களைப் பாதுகாத்தலும், பராமரித்தலும்

ஈ) - திருமுழுக்கு, உறுதிப்பூசுதல் பெற்றிருத்தல்
- திருமணமாகாது வாழ்நாள் முழுவதும் வாழத் தீர்மானித்த ஆண்கள் (பிரம்மச்சாரியாக)
- இறை அழைப்பைப் பெற்றிருத்தல்
- பெற்றோர் திருமண அருளடையாளத்தைப் பெற்றிருத்தல்
- அவர் நற்பண்பு கொண்டவராக இருத்தல்
- நல்ல தேக ஆரோக்கியமுடையவராக இருத்தல்
- தேவையான பயிற்சிக் காலத்தை நிறைவு செய்தவராயிருத்தல்
- சுயமாக விரும்பிச் செல்லல்.

13. **அ)** ஒரு அணும், ஒரு பெண்ணும் மனம் ஒருமித்து ஒருவருக்கொருவர் தம்மை அர்ப்பணிக்கும் முறிவுபடாத பிரிக்கமுடியாத ஒரு உடன்படிக்கையாகும்.

**ஆ) ஒருமை :** ஒரு ஆண் ஒரு பெண்ணை, ஒரு பெண் ஒரு ஆணை மட்டுமே திருமணம் செய்துகொள்ளலாகும்.

**கட்டவிழாமை :** கட்டவிழாமை என்றால் விவாகரத்துச் செய்ய முடியாது, விட்டுப் பிரிய முடியாது என்பதாகும்.

**இ) அன்னியோன்னிய அன்பால் முழுமையடைதல்:** கணவன் மனைவி இருவரும் ஒருவர் ஒருவர் மீது காட்டும் அன்பினாலாகும். அவ்வன்பை நாளுக்கு நாள் வளர்த்துக்கொள்ள வேண்டும்.

**குழந்தைப் பேறும் அவர்களை வளர்த்தலும்:** தமக்குப் பிறக்கும் பிள்ளைகளை மகிழ்வு டன் ஏற்று அவர்களுக்கு அன்பு, பாதுகாப்பு, ஊட்டம், கிறிஸ்தவ நடத்தை கல்வி என்பவற்றைப் பெற்றுக்கொடுத்தலாகும்.

14. **அ)** - 18 வயதிற்குக் குறையாதிருத்தல்
- சுதந்திர விருப்பம், தான் விரும்பாத ஒருவரைத் திருமணம் செய்யும்படி கட்டாயப்படுத்துதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## மட்டக்களப்பில் இரு நூல்கள் வெளியீடு

2018 செப்டம்பர் மாதம் 2ம் திகதி இடம்பெற்ற ஆயித்தியமலை, சதா சகாய அன்னை திருத்தலப் பெருவிழாவன்று சதா சகாய அன்னையின் திருப்பட, ஆயித்தியமலை திருத்தல வரலாறுகளுடன் அன்னையின் அருட்கரத்தால் இறைமக்கள் பெற்ற சகாயங்கள் மற்றும் அன்னையின் நவதின வேண்டுதல்கள் அடங்கிய "சகாயத்தாய்" எனும் நூல் திருத்தல வெளியீடாக வெளியிடப்பட்டது.

அதேவேளை செப்டம்பர் 9ம் திகதி தாண்டவன்வெளி காணிக்கை அன்னை ஆலயம் தனிப்பங்காகப் பிரகடனப்படுத்தப்பட்டு நூறு ஆண்டுகள் நிறைவைச் சிறப்பிக்குமுகமாக இடம்பெற்ற சிறப்பு நன்றித் திருப்பலியின் நிறைவில் காணிக்கை அன்னை ஆலய வரலாற்றில் தடம் பதித்தவர்களையும், நினைவுகளையும் உள்ளடக்கியதுமான "நூற்றாண்டு நினைவு மலர்" தொகுப்பும் வெளிவந்துள்ளது.

இவ்விரு தொகுப்பு நூல்களும் தொண்டன் கலைக்குழு அங்கத்த வரும், தாண்டவன்வெளி காணிக்கை அன்னை ஆலயப் பங்கைச் சார்ந்தவருமான திரு.ஜே.எச்.இரத்தினராஜா அவர்களாலேயே தொகுத்து வெளியிடப்பட்டுள்ளது.

இவரை "தொண்டன்" குழு பாராட்டுகின்றது.

17ம் பக். தொடர்ச்சி.....

பேணுவதன் வாயிலாக ஒருவர் அடுத்தவரின் நலனைக் காத்திட முன்வர வேண்டும். கடவுளின் படைப்பாகிய இப்பூமியினை நாம் பொறுப்போடு பாதுகாத்திட வேண்டும். எல்லா வகையான அமைப்புக்களையும் வலுப்படுத்தி அவை முறையாகச் செயல்பட உதவிட வேண்டும். மனிதரிடையே வேற்றுமைகளைக் களைந்து அனைவரும் சமமாண்பு கொண்டவர்கள் என்பதனை வலியுறுத்த வேண்டும். பொதுநலனைப் பேணிக்காப்பதில் அனைவரும் இணைந்து கைகோர்த்து நடக்க வேண்டும்.

– முற்றும்

- பிறர்தாரத்தைத் தமதாக்கிக்கொள்வது (திருமணகுற்றம்)
- இரத்த உறவு
- கலப்புத் திருமணம்

**ஆ)** - கத்தோலிக்கர் அல்லாத ஒரு குரு முன்னிலையில் அல்லது பதிவாளர் முன்னிலையில் திருமணம் செய்ய கத்தோலிக்கருக்கு அனுமதியில்லை. அத்தகைய திருமணங்கள் அருளடையாளமாக முடியாது.

**இ)** - சுயவிருப்பம் இன்றி நிறைவேற்றப்பட்ட திருமணங்கள்
- திருமணத்திற்குச் சட்டபூர்வமான தடை இருந்தும் அனுமதியின்றி நிறைவேற்றப்பட்ட திருமணங்கள்.

**ஈ)** - இருவரும் கத்தோலிக்கராயிருத்தல்
- மனம் ஒருமித்த அன்பும் பிரமாணிக்கமும்
- தூய்மையான வாழ்க்கை
- புரிந்துணரும் தன்மை
- தியாகம்
- குடும்பத்தின் ஒற்றுமைக்காகச் செயற்படுவது
- திருமணத் தம்பதிகள் ஆன்மீக வாஞ்சையோடு திருமணக் கடமைகளை நிறைவேற்றுதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செஞ்சோலைக் கிராமத்தின் எழில் குன்றிக் கிடந்தது.

சற்றேறக்குறைய மூன்று மாதங்களின் முன்னர்தான், புதிதாகப் பட்டதாரி நியமனம் பெற்றிருந்த மகளைக் கூட்டிச்சென்று வள்ளிபுனத்தில் கனிஷ்ட–சிரேஷ்ட பாடசாலையில் சேர்த்துவிட்டு வந்திருந்தேன்.

அரைகுறை மனதோடுதான் அவளை அங்கே சேர்த்துவிட்டு வெறுங்கையோடு திரும்பி வந்திருந்தேன், போர்க்களத்திற்குச் சென்ற இராவணன் நிலையில்.

அதற்குள் இந்த நியாயமற்ற அழிவுகள் நேருமென்று எவர்தான் எதிர்பார்த்தார்.

யுத்த அரக்கன் பொருள் பண்டங்களையும் மக்களையும் மட்டுமா அழித்துச் சின்னாபின்னப் படுத்தி அகன்று போகின்றான்? சூழலையுமல்லவா மாசுபடுத்திச் செல்கிறான்.... யுத்தத்திற்கான அறிகுறிகள் புலப்பட்டபோதே போய் அவளை அழைத்து வரலாமென்று ஆசைப்பட்டேன்.

பயந்த சுபாவமுள்ள எனது மன நிலையும், உடல் நிலையும் அதற்கு ஒத்துவருவதாயில்லை. அதற்கேற்றாற்போல் மகளிடமிருந்து எனக்கு எச்சரிக்கை செய்யப்பட்டு எழுதிய மடலொன்று, சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கம் மூலம் வந்து சேர்ந்தது. அம்மா அப்பா நீங்கள் எதற்கும் யோசிக்க வேண்டாம். ஏற்கனவே Red Crossல் நான் வேலை செய்வதும் ஒரு வழிக்கு நன்மைதான் எனப் புரிகிறது.

இன்னமும் மூன்று தினங்களில் தமிழ்த் தினப் போட்டிகள் ஆரம்பமாகின்றன. அதற்குள் எதுவும் விபரீதங்கள் தொடங்காது என நினைக்கிறேன். எப்படியோ நான் வந்து சேர்வேன். கலங்க வேண்டாம்.

அப்பாவை அவசரப்படுத்தி இங்கு அனுப்ப வேண்டாம். எதற்கும் இங்குள்ள நிலைமைகளை நேரில் வந்து பேசிக்கொள்கிறேன். நீங்கள் தங்கச்சியையும் பயப்படுத்தாமல் அவதானமாகப் பார்க்கவும்.

– இப்படிக்கு அன்பு மகள்.

ஆம், அவள்மீது எனக்கு நம்பிக்கையிருக்கத்தான் செய்தது. முன்பெல்லாம் கோழையாய்க் கூனிக்குறுகி வாழ்ந்தவள், கம்பஸுக்குப் போனதும் அப்படி ஒரு தைரியசாலியாக வளர்ந்துவிட்டாள்.

எனவே, என் பயத்தையும் மூட்டை கட்டி வைத்து விட்டு நானும் உஷாரானேன்.

அவள் வந்து சொன்ன கதைகளைக் கேட்டதும் மூச்சடைப்பு வந்துவிடுமோ என்று பயமாகத்தானிருந்தது.

இந்த நேரம் பார்த்து எங்கே, இருதயநோய் வந்து தொற்றிவிடுமோ என்றும் லேசான ஒரு நடுக்கம்.




வீ்கேயெம்

குறுங்கதை - 46



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media



# மக்களுக்கு நெருக்கமாக, மனத்தாழ்மையுடன் இருக்கும் நல்லாயன்....

நம் இதயங்களில் நஞ்சைக் கலக்கும் அதிகாரத்திற்கும், செயல்முறைக்கு ஒவ்வாத கருத்தியலுக்கும் நம்மை உட்படுத்தாமல், மக்களுக்கு நெருக்கமானவர்களாக இருப்போம். "நல்லாயனான இயேசுவுக்கு அதிகாரத்தை வழங்கியது, அவரின் பணிவு, இரக்கம், மற்றும் மக்களோடு நெருக்கமாக இருந்தது" என தன் மறையுரையில் எடுத்துரைத்தார் திருத்தந்தை பிரான்சிஸ்.

அக்காலத்து சட்ட வல்லுநர்கள், மக்களிடமிருந்து விலகி நின்று, ஒரு பேராசிரியர் போல் போதித்தனர். ஏனெனில், அவர்களுக்கு மக்கள் மேல் எவ்வித அக்கறையும் இருக்கவில்லை! ஆனால், இயேசுவோ, பெரும்பான்மையான வேளைகளில், மக்களோடு இருந்தார், அவ்வாறு இல்லாதபோது, இறைவனோடு செபித்துக்கொண்டிருந்தார் எனவும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

இயேசு மக்களோடு மக்களாக வாழ்ந்து, அவர்கள் கண்களை உற்று நோக்கி, அவர்களைத் தொட்டு குணமாக்கி, அவர்களுக்கு செவிமடுத்து அவர்களை அரவணைத்ததிலிருந்தே அவரின் அதிகாரம் பிறந்தது என மேலும் உரைத்த திருத்தந்தை, நயீன் நகர கைம்பெண்ணின் மகனை உயிர்ப்பித்த புதுமையிலும், கூட் டத்தின் அருகே சென்று உயிரை மீட்டுத் தந்தார், ஏனெனில், அவர் தன் இதயத்தின் வழியாக இங்கு சிந்தித்தார் என உரைத்தார். இயேசு கனிவுள்ளவர், அவர் ஒரு நாளும் வாழ்வில் கோப வார்த்தைகளை உதிர்த்ததில்லை, மற்றும், மற்றவர்களுக்கு தண்டனை வழங்கியதில்லை, கோவிலை வியாபாரக்கூடமாக மாற்றியதைக் கண்டபோது, சாட்டையால் அவர்களை இயேசு துரத்திய போதும், தந்தையாம் இறைவன்மீது கொண்ட அன்பினாலேயே அவ்வாறு செய்தார் என எடுத்துரைத்தார்.

ஒவ்வோர் ஆயரும், அருள்பணியாளரும் இயேசுவைப் போல், கனிவும் மனத் தாழ்மையும் கொண்டவராக, மக்களுக்கு நெருக்கமாக இருப்பதிலிருந்து தங்கள் அதிகாரத்தைப் பெறவேண்டும் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்தார் திருத்தந்தை அவர்கள். ■

மனித மனம்தான் எவ்வளவு பலவீனமானது.
இதனையெல்லாம் இந்த யுத்தம் நடத்தும் அசுர கூட்டத்தினர் உணரமாட்டார்களா?
அவர்களை நினைக்குந்தோறும் கோபமும் அச்சமும் சேர்ந்தே வந்து கழுத்தை அறுத்தன.

ஏய், சர்வதேச சமூகமே! உனக்கேனிந்த சனி பிடித்த ரோகம்? இரட்டை வேடம்?

ஒரு கையால் கொடுப்பதுபோல் கொடுத்து, மறு கையால் அழிப்பதுதான் உன் வேலையா?
தயவுசெய்து இவற்றையெல்லாம் விட்டுவிடு!
உனது ஏகபோக சாம்ராஜ்ய கனவிலிருந்து விலகியிரு! ■

## பொன்விழா நோக்கிய பயணத்தில்

"தொண்டன்"



விரைவில் சிறப்புப் போட்டிகளும், பரிசில்களும்....

1. கட்டுரைப் போட்டி
2. கவிதைப் போட்டி
3. பேச்சுப் போட்டி
4. சித்திரப் போட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினாவிடைப் போட்டிக்கான அனுசரணை வழங்குபவர் :
திரு. M.M. ஜெஸ்லிராஜ்,
M.J. மெகா எலெக்ரோனிக்ஸ் அன்ட் பேணிச்சர்ஸ்
142 A, விபுலானந்தபுரம், மயிலம்பாவெளி, மட்டக்களப்பு.
தொ.எண்: 0779780151, 0775019977

## வினாவிடைப் போட்டி இல. - 07

1) "மனிதர் மனத்தில் எழும் எண்ணங்கள் ஏராளம்; ஆனால், ஆண்டவரது திட்டமே நிலைத்து நிற்கும்" இத்திருவிவிலிய வாக்கியத்தின் இலக்கத்தைத் தருக?
..........

2) பெலிஸ்தியரின் பாளையத்திலிருந்து எத்தனை படைகளாகக் கொள்ளைக்காரர் புறப்பட்டு வந்தனர்?
..........

3) புனித இஞ்ஞாசியார் எப்போது இயேசுசபையின் முதல் தலைவராகத் தெரிவுசெய்யப் பட்டார்? ..........

4) "திருஅவையின் சமூக ஈடுபாடு" எனும் சுற்றுமடல் எதன் 20ம் ஆண்டு நினைவாக வெளியிடப்பட்டது?
..........

5) "2020 செவ்வாய்" திட்டத்திற்கு நாசா அனுப்பப்போகும் தானோட்டி வாகனத்தின் பெயர் என்ன? ..........

6) ஆசுகவி வேலுப்பிள்ளை எதிரிகளைக் கதிகலங்கச் செய்ய நடாத்திய பத்திரிகை எது?
..........

7) "விடுதலை இறையியலின் சில அம்சங்கள் பற்றிய அறிக்கை" எப்போது வெளியிடப் பட்டது? ..........

8) அரைத்துச் சிரங்குகள் மீது தடவி வந்தால் விரைவில் குணந்தரும் பூ எது?
..........

9) பன்னாட்டு விருதுபெற்ற புலம்பெயர்ந்தவர் பற்றிய வத்திக்கானின் காணொளித் தயாரிப்புக்கு உதவிய நிறுவனம் எது?
..........

10) உரோமையின் வெற்றியை நினைவுகூர கி.பி. 71ம் ஆண்டில் வார்க்கப்பட்ட எந்த நாணயத்தில், என்ன குறிப்பிட்டிருந்தது ?
..........

பெயர் : ..........

முகவரி : ..........

..........

அனுப்பவேண்டிய முகவரி:
வினாவிடைப் போட்டி - 07
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம் : ..........

..........

முடிவுத்திகதி : 31.10.2018



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




**(சரியான விடையைத் தெரிந்து இடைவெளிகளை நிரப்புக)**

1. அப்போது யோனத்தான், "என் தந்தை நாட்டைக் குழப்புகிறார். பாருங்கள்; நான் சிறிதளவு தேனைச் சுவைத்தேன். இப்போது என் கண்கள் தெளிவடைந்துள்ளன. இன்று மக்கள் எதிரியின் பொருட்களை உண்டிருந்தால் ...................... பெரும் அழிவு ஏற்பட்டிருக்கும்" என்றார்.

   அ) இஸ்ரயேலருக்கு ஆ) பெலிஸ்தியருக்கு இ) எபிரேயருக்கு

2. அன்று வீரர்கள் பெலிஸ்தியரை முறியடித்தனர். எனவே, சோர்வுற்றிருந்தனர். அப்போது அவர்கள் கொள்ளைப் பொருட்களை உண்டனர். வீரர்கள் ஆண்டவருக்கு எதிராகப் பாவம் செய்கிறார்கள் என ...................... அறிவிக்கப்பட்டது.

   அ) சவுலிடம் ஆ) யோனாத்தானிடம் இ) சாமுவேலிடம்

3. அதற்குச் சவுல், "நீங்கள் வஞ்சித்துவிட்டீர்கள். இப்பொழுதே ஒரு பெரும் ...................... என்னிடம் உருட்டி வாருங்கள். நீங்கள் வீரரிடையே சென்று 'ஒவ்வொருவனும் மாட்டையோ, ஆட்டையோ இங்கு வந்து அடித்துச் சாப்பிடட்டும். பாவம் செய்ய வேண்டாம்' என்று சொல்லுங்கள்" என்றார்.

   அ) கட்டையை ஆ) மரத்தை இ) கல்லை

4. ஒவ்வொருவனும் அன்றிரவே தன் மாட்டைக் கொண்டுவந்து அங்கே அடித்தான். சவுல் ஆண்டவருக்கு ஒரு ...................... எழுப்பினார். அதுவே அவர் ஆண்டவருக்கு முதலில் எழுப்பியது. சவுல் "இரவில் பெலிஸ்தியரைப் பின்தொடர்ந்து சென்று விடியும்வரை கொள்ளையிடுவோம்" என்றார்.

   அ) பலிபீடம் ஆ) பீடம் இ) ஆலயம்

5. அதற்கு வீரர்கள் "உமக்கு நல்லதெனப் பட்டதைச் செய்யும்" என்றனர். குருக்களோ, "நாமிங்கே கடவுளை அணுகுவோம்" என்றார்கள். சவுல் ...................... நோக்கி, "நான் பெலிஸ்தியரைப் பின் தொடரலாமா? அவர்களை எம்மிடம் ஒப்படைப்பீரா" எனக் கேட்க அவர் பதில் கூறவில்லை.

   அ)யாவேயை ஆ) கடவுளை இ) இறைவனை

6. எனவே, சவுல் "வீரர்களின் தலைவர்களே, நீங்கள் இங்கே வாருங்கள்; ...................... இன்று எவ்வாறு ஏற்பட்டது என்று கண்டறியுங்கள். இஸ்ரயேலை விடுவிக்கும் ஆண்டவர்மீது ஆணையாகச் சொல்கிறேன். இதற்குக் காரணமாக யோனத்தானே இருந்தாலும் அவன் சாவான்" என்றார்.

   அ) இச்சம்பவம் ஆ) இவ்விடயம் இ) இப்பாவம்

7. எவனும் பதில் சொல்லவில்லை. சவுல் இஸ்ரயேலரை நோக்கி, "நீங்கள் ஒரு பக்கம் இருங்கள். என் மகன் யோனத்தானும், நானும் ஒரு பக்கம் இருக்கிறோம்" எனக்கூற ...................... "உமக்கு நலமெனத் தோன்றியதைச் செய்யும்" என்றனர்.

   அ) இஸ்ரயேலரும் ஆ) வீரர்களும் இ) மக்களும்

8. சவுல், "இஸ்ரயேலின் கடவுளாகிய ஆண்டவரே! முழு உண்மையை வெளிப்படுத்தும்" என்று மன்றாட, யோனத்தான் மீதும், சவுல் மீதும் ...................... விழுந்தது. வீரர்களோ தப்பினர். சவுல் "எனக்கும், யோனாத்தானுக்கும் சீட்டுப் போடுங்கள்" என்று சொல்ல, யோனத்தான் மீது சீட்டு விழுந்தது.

   அ) கல் ஆ) பெயர் இ) சீட்டு

9. சவுல் யோனத்தானை நோக்கி, "என்ன செய்தாய்?" என வினவ, அவன் "என் கையில் இருந்த கோலின் நுனியால் கொஞ்சம் தேன் எடுத்துச் சுவைத்தேன். இதோ நான் ...................... தயார்." என்றான். சவுல் "நீ சாகத்தான் வேண்டும். அல்லது கடவுள் எனக்கு அப்படியே செய்யட்டும்" என்றார்.

   அ) தண்டனைக்கு ஆ) சாவதற்கு இ) பதிலுக்கு

10. மக்கள் சவுலை நோக்கி, "இஸ்ரயேலுக்குப் பெரிய விடுதலையைக் கொணர்ந்த யோனத்தான் சாகலாமா? கூடாது! ஆண்டவர் மேல் ஆணை!" என்று கூறி அவரை ...................... தப்புவித்தனர். சவுல் திரும்பிச் செல்ல, பெலிஸ்தியரும் தங்கள் இடங்களுக்குச் சென்றனர்.

    அ) சாவினின்று ஆ) தண்டனையினின்று இ) பாவத்திலிருந்து


**(வினாப்படிவத்திலேயே விடைகள் எழுதியனுப்பப்பட வேண்டும், பிறிதாக அனுப்பப்படும் விடைகள் போட்டியில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டாது)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறிவை வளர்ப்போம் - 184

பரிசுப் போட்டி



(பொருத்தமான சொற்களின் கீழ்க் கோடிடுக)

**சிறுவர்களுக்கு மட்டும் :**
முடிவுத் திகதி :
**31.10.2018**

1. "Voodoo Cult" இன் இல்லம் என்று அழைக்கப்படும் கரிபியன் தீவு:
   (வெனிஸ் - பிஜி - ஹெயிட்டி)

2. மரகத பௌத்த ஆலயம் உள்ள தலைநகரைக் கொண்ட நாடு:
   (தாய்லாந்து - பாங்கொக் - சிங்கப்பூர்)

3. நவாலியூர்ச் சோமசுந்தரப் புலவரை அன்பாக அழைக்கும் பெயர்:
   (தங்கத்தாத்தா - பாரதிதாசன் - கவிஞர்)

4. மக்களின் முன்னேற்றம் பற்றிய சுற்றுமடல் வெளியிடப்பட்ட தினம் :
   (26.03.1967 - 07.12.1965 - 26.03.1966)

5. 'அடம்பன் கொடியும் திரண்டால் ..............................'
   (பலம் - வெற்றி - மிடுக்கு)

6. வெளிப்படையாகப் புகழ்ந்தும் மறைவாக இகழ்ந்தும் கூறுதல்:
   (சிலேடை - அங்கதம் - அறம்பாடுதல்)

பெயர் : ..........................................................

முகவரி : ..........................................................

..........................................................

**அனுப்பவேண்டிய முகவரி:**
திருவிவிலியம் கற்போம் / அறிவை வளர்ப்போம் - 184
தொண்டன்
அ. பெ. எண் - 44
மட்டக்களப்பு.

பரிசு அனுப்பவேண்டிய தபாலகம்:

..........................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media




# போட்டி முடிவுகள்...

**திருவிவிலியம் கற்போம், அறிவை வளர்ப்போம் - 182,**

பங்கு பற்றியோர் 15 பேர், இரு பிரிவுக்கும் சரியான விடைகளை எழுதியவர் ஒருவர். ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதியோர் 14 பேர்.

## திருவிவிலியம் கற்போம் – 182 விடைகள்

பெலிஸ்தியரின், யோனத்தான், காத்திருந்தார், மக்களுக்கு, படைக்கலன்களை, தாங்குவோன், மனதிற்கேற்ப , எங்களிடம், குழிகளை, ஆண்டவர்

## அறிவை வளர்ப்போம் – 182 விடைகள்

1. 40 பாகை
2. தன்சானியா
3. அருட்தந்தை. பீ.ஏ. தோமஸ்
4. எள்
5. அழகு
6. கண்ணுறுதல்

## பரிசுகள் – அனுசரணை: அருள்தந்தை. அன்ரனி குருஸ் CRS

போட்டியின் இரு பிரிவுகட்டும் சரியான விடைகளை எழுதி I ம் பிரிவில் 300/= பரிசு பெறுபவர்:

* லோ. டனுஸ்ரன்,
98, விபுலானந்தபுரம்,
மயிலம்பாவெளி.

போட்டியின் ஒரு பிரிவுக்கு மட்டும் சரியான விடைகளை எழுதி II ம் பிரிவில் 200/= பரிசு பெறுவோர்:

* A. அமந்தா ஸ்ரெப்னி,
கெஹெல்வத்த,
ஹெறாப்டன்.

* சு. யேருசாலி,
சித்திவிநாயகர் குறுக்கு வீதி,
புன்னைச்சோலை,
மட்டக்களப்பு.

* A. விவிலியா,
5ம் குறுக்கு,
திருப்பெருந்துறை,
மட்டக்களப்பு.

## சிறுவர் சிறுமியருக்கான வர்ணம் தீட்டும் போட்டி 134 முடிவுகள்

**1ம் பரிசு - 400/=**

* மெடலின் சில்வா,
81/38, நாவலர் வீதி,
கருவேப்பங்கேணி,
மட்டக்களப்பு.

**2ம் பரிசு - 300/=**

* C.S. சுகேஷன்,
15/11, 5ம் குறுக்கு,
சின்ன ஊறணி,
மட்டக்களப்பு.

**3ம் பரிசு - 200/=**

* பார்த்திபன் சியாம்,
C/O. கிறிஸ்ரோபர்,
கடற்கரைவீதி,
களுவாஞ்சிக்குடி – 08.

**போட்டியில் பங்குகொண்ட அனைவருக்கும் எமது நன்றி. (ஆ - ர்)**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media

## ஆயித்தியமலை சதாசகாய அன்னைத் திருத்தல திருவிழா



## மட்டக்களப்பில் இறையியல் கல்லூரி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | noolaham.media